வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959 Reg. No. : P. 1632 விலை ரூ. 30/=

# ஈழநாடு

Eelanadu ඊළනාඩු




Email : eelanaduweekly@gmail.com மலர் : 05 23.02.2024 வெள்ளிக்கிழமை இதழ் : 54 பக்கங்கள் : 12

# கொக்குத்தொடுவாய் மனித புதைகுழி 1994 - 96 காலப் பகுதிக்கு உரியவை

## ராஜ் சோமதேவ அறிக்கை

- மார்ச் 4இல் மீண்டும் அகழ்வதற்கு திட்டம்
- அகழ்வுப் பணியை தொடர நிதி இல்லை

முல்லைத்தீவு, பெப்ரவரி 23

கொக்குத்தொடுவாயில் கண்டறியப்பட்ட மனிதப் புதைகுழி மீட்கப்பட்ட எச்சங்கள் 1994 முதல் 1996ஆம் ஆண்டு காலப்பகுதிக்கு உரியவை என்று ராஜ் சோமதேவவின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டதாக சட்டத்தரணி வி. கே. நிரஞ்சன் தெரிவித்தார். 11

### 1984 முதல் இராணுவ கட்டுப்பாட்டுப் பகுதி!

கொக்குத்தொடுவாய் பிரதேசம் 1984 ஆம் ஆண்டு முதல் தொடர்ச்சியாக இராணுவ கட்டுப்பாட்டு பிரதேசமாக இருந்துள்ளது. 1984ஆம் ஆண்டு அரச அறிவிப்பின் மூலம் இந்தப் பகுதியிலிருந்து மக்கள் வெளியேற்றப்பட்டனர். அப்போது தொடக்கம் 2011ஆம் ஆண்டுவரை சூனிய பிரதேசமாகவும் இது இருந்தது என்பது குறிப்பிடத்தக்கது.

### எலும்புக்கூடுகள் புலிகளுடையவை?

மீட்கப்பட்ட எலும்புக்கூடுகள் விடுதலைப் புலிகளுடையவையாக இருக்கலாம் என்று சந்தேகம் நிலவுகின்றது. எலும்புக்கூடுகள் பெண்களுடையவை.

எலும்புக்கூடுகள் தவிர சயனைட் குப்பிகள், போராளிகளின் இலக்கத் தகடுகளும் அடங்கும்.

### கடந்து வந்த பாதை..!

**2023 ஜூன் 29 -**

தேசிய நீர் வழங்கல் வடிகால் அமைப்பு சபையினர் நீர் குழாய் பொருத்துவதற்காக நிலத்தைத் தோண்டியது. அப்போது மனித எச்சங்கள் கண்டறியப்பட்டன.


**2023 ஜூலை 28**

கொக்குத்தொடுவாய் மனிதப் புதைகுழி 11

### 1994இல் புலிகள் தாக்குதல்!

1984ஆம் ஆண்டு முதல் இராணுவ கட்டுப்பாட்டிலிருந்த கொக்குத்தொடுவாயை கைப்பற்ற தமிழீழ விடுதலைப் புலிகள் 1994ஆம் ஆண்டின் இறுதியில் போர் தொடுத்திருந்தனர். இது தொடர்பில் இராணுவத்துக்கு முன்னரே தகவல் கசிந்திருந்த நிலையில் புலிகளுக்கு இந்தத் தாக்குதல் தோல்வியாக அமைந்தது. அந்தச் சமயத்தில் வீரச்சாவடைந்த பல மாவீரர்களின் உடலங்கள் மீட்கப்பட்டிருக்கவில்லை என்று முன்னாள் போராளிகள் குறிப்பிட்டனர். எனினும், மீட்கப்பட்ட எலும்புக்கூடுகளுக்கும் வீரச்சாவடைந்த மாவீரர்களுக்கும் தொடர்புள்ளதா என்பது உறுதியாகத் தெரியவில்லை.

## ஆர். ஆர். காலமானார்!



யாழ்ப்பாணம், பெப். 23

தமிழீழ மக்கள் விடுதலைக் கழகத்தின் (புளொட்) சிரேஷ்ட பிரதித் தலைவரும் ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பொதுச் செயலாளருமான ஆர். ஆர். என அழைக்கப்படும் வேலாயுதம் நல்லநாதர் (இராகவன் - வயது 61) நேற்று கொழும்பில் காலமானார்.

அண்மையில், திடீரென நோய்வாய்ப்பட்டு கொழும்பு தனியார் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்த அவர் நேற்று வியாழக்கிழமை மாலை காலமானார். 11

## இந்திய தூதருடன் சிறீதரன் சந்திப்பு



யாழ்ப்பாணம், பெப். 23

இலங்கைக்கான இந்தியத் தூதுவர் சந்தோஸ் ஜா, பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரனை அழைத்து, யாழ் இந்தியத் துணைத்தூதரகத்தில் நேற்று முன்தினம் சந்திப்பொன்றை நடத்தியுள்ளார்.

இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் தலைவராகத் தெரிவுசெய்யப்பட்டமைக்காக சிறீதரனுக்கு வாழ்த்துரைத்த அவர், கட்சியின் உள்ளக முரண்பாடுகளைக் களைந்து, அடுத்தகட்ட நகர்வுகளை விரைந்து மேற்கொள்ள வேண்டும் எனவும் கேட்டுக்கொண்டுள்ளார்.

யாழ். இந்தியத் துணைத்தூதுவர் ராகேஷ் நட்ராஜும் இணைந்திருந்த இச் சந்திப்பில் ஈழத்தமிழர் நலன்சார் விடயங்களில் இந்தியாவின் முறையான வகிபங்கை உறுதிப்படுத்த வேண்டியுள்ளதன் அவசியம் குறித்தும் கலந்துரையாடப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

## துன்னாலையில் வாள்வெட்டு இரு இளைஞர்கள் படுகாயம்!

யாழ்ப்பாணம், பெப். 23

வடமராட்சி துன்னாலை தெற்கு பகுதியில் நேற்று பிற்பகல் 1:30 மணியளவில் இடம்பெற்ற வாள்வெட்டு சம்பவத்தில் இரு இளைஞர்கள் படுகாயமடைந்துள்ளனர்.

இதில் அதே இடத்தை சேர்ந்த 28 வயதுடைய விஜயபால வின்சன், 19 வயதுடைய ராஜ்பால ரஜீவன் ஆகிய இரு இளைஞர்களுமே படுகாயமடைந்துள்ளனர்.

இரு இளைஞர்களும் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ-02)

## வீடு புகுந்து தாக்கிவிட்டு வரும்போதே யாழ்.பல்கலை மாணவன் விபத்தில் பலி

### விசாரணைகளில் வெளிவந்தது தகவல்

யாழ்ப்பாணம், பெப். 23

நீர்வேலியில் நேற்று முன் தினம் விபத்தில் உயிரிழந்த பல்கலைக்கழக மாணவன், வீடொன்றில் தாக்குதல் நடத்தி, வாகனத்துக்கு தீவைத்து விட்டு திரும்பி வரும் போதே விபத்தில் சிக்கியது தெரிய வந்துள்ளது.

ஒரு தலைக்காதலால் ஏற்பட்ட பழிவாங்கும் உணர்வினாலேயே இந்த தாக்குதல் சம்பவம் நடந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

நேற்று முன் தினம் அதிகாலை 5.30 மணியளவில் அச்சுவேலி பொலிஸ் பிரிவிற்குட்பட்ட சிறுப்பிட்டி பகுதியில் நாய் குறுக்காக ஓடியதால் 11

## கச்சதீவு திருவிழா இன்று ஆரம்பம்

யாழ்ப்பாணம், பெப். 23

கச்சதீவு புனித அந்தோனியார் தேவாலயத்தின் வருடாந்த திருவிழா இன்று வெள்ளிக்கிழமை ஆரம்பமாகிறது.

திருவிழாவுக்கான சகல ஏற்பாடுகளும் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன என்று யாழ்ப்பாண மாவட்ட அரசாங்க அதிபர் ஏ. சிவபாலசுந்தரம் தெரிவித்தார்.

கச்சதீவு புனித அந்தோனியார் தேவாலயத்தின் வருடாந்த திருவிழா இன்று வெள்ளிக்கிழ 11

## கடன் மறுசீரமைப்புக்கு பின்னரும் பெரும் நெருக்கடிக்குள் இலங்கை

கொழும்பு, பெப். 23

இலங்கையின் கடன் நிலைத்தன்மை பகுப்பாய்வின் இலக்குகளின் படி, கடன் மறுசீரமைப்பு திட்டத்திற்கு பின்னரும், இலங்கை கடன் சுமையால் பல சிரமங்களை எதிர்கொள்ளும் என உலகலாவிய இறையாண்மை கடன் ஆராய்ச்சியாளர் தியோ மெரிட் தெரிவித்துள்ளார்.

அரசாங்க பொது நிதிக் குழுவின் நிகழ்வொன்றில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவித்தபோதே அவர் இந்த விடயத்தை குறிப்பிட்டுள்ளார்.

சர்வதேச நாணய நிதியத்தின் கடன் மறுசீரமைப்பு இலக்குகள் உரிய முறையில் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

ஜப்பான், அமெரிக்கா மற்றும் பிரான்ஸ் போன்ற நாடுகளுக்கும் பொருந்தக் கூடிய திட்டமொன்றே சர்வதேச நாணய நிதியம் இலங்கைக்கும் வழங்கியுள்ளது.

இலங்கையால் வலுவான வருவாய்த் தளத்துடன் தாங்கிக்கொள்ளக் கூடிய கடனை விட அதிகமான கடனைத் தக்கவைத்துக் கொள்ள முடியும்.

இலங்கை கடந்த காலத்தில் நடுத்தர வருமானம் பெறும் நாடாக இருந்தமையே இதற்கு பிரதான காரணமாகும் 11

**உண்மைகள் புனிதமானவை; கருத்துக்கள் சுதந்திரமானவை**

# இப்படியும் நடக்கிறது

ஜனாதிபதித் தேர்தல் திட்டமிட்டவாறு ஒக்ரோபரில் நடக்கும் என்று அரசாங்கத்தின் சார்பில் நீதி அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ அறிவித்திருக்கிறார்.

பாராளுமன்றத்துக்கு ஏப்ரல் மாதத்தில் தேர்தல் நடக்கலாம் என்றும் அதற்கான ஆயத்தங்களைச் செய்யுமாறும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தனது ஐக்கிய தேசியக் கட்சியினருக்கு பணித்திருக்கிறார் எனவும் ஒரு செய்தி வெளிவந்து பரபரப்பை ஏற்படுத்தியது.

மறுபுறத்தில் நிறைவேற்று அதிகாரத்தை நீக்குவது தொடர்பாக ஆராய்ந்து அறிக்கை தருமாறு முன்னாள் சபாநாயகர் கரு ஜெயசூரிய தலைமையிலான குழு ஒன்றிடம் கேட்கப்பட்டிருக்கின்றது என்றும் அந்த அறிக்கை கிடைத்ததும் நிறைவேற்று அதிகாரத்தை நீக்குவது தொடர்பான சர்வஜன வாக்கெடுப்பை நடத்துவதற்கு ஜனாதிபதி திட்டமிடுகிறார் எனவும் ஒரு செய்தி வெளிவந்திருந்தது.

ஆக, முதலில் எந்தத் தேர்தல் நடக்கும் என்பதில் கட்சிகளிடையே குழப்பமான நிலைமை.

முதலில் ஜனாதிபதித் தேர்தல் நடைபெற்றால் அதில் மூன்று வேட்பாளர்களோ அல்லது அமெரிக்காவும் நேச நாடுகளும் விரும்புவதுபோல இரண்டு வேட்பாளர்களோ போட்டியிட்டால், அவர்களில் யார் இந்த நாட்டை இன்றைய நிலையில் வழிநடத்துவதற்கு பொருத்தமானவர் என்று சிந்தித்து அத்தகைய ஆளுமை உள்ள ஒருவர் வெற்றி பெறுவதற்கு சந்தர்ப்பம் ஏற்படலாம். அவ்வாறு ஜனாதிபதி வெற்றிபெற்ற பின்னர், அவருக்கு ஆதரவு வழங்கிய கட்சிகள் பாராளுமன்றத் தேர்தலில் பெரும்பான்மை பெறுவதற்கே அதிக சந்தர்ப்பம் ஏற்படும்.

ஆனால், பாராளுமன்ற தேர்தல் முதலில் நடைபெற்றால் தமக்கே மக்கள் மத்தியில் அதிக செல்வாக்கு இருப்பதாக நம்பிக்கொண்டிருக்கும் ஒவ்வொரு கட்சிகளினதும் மக்கள் செல்வாக்கு எந்த அளவுக்கு இருக்கின்றது என்பது வெளிச்சத்துக்கு வந்துவிடும். இன்றைய நிலையில் பாராளுமன்ற தேர்தல் முதலில் நடைபெற்றால், எந்த ஒரு கட்சியும் அறுதிப் பெரும்பான்மையைப் பெறாது என்றே நம்பப்படுகின்றது.

இப்படியொரு நிலை வரும் போது, பாராளுமன்றம் ஒரு தொங்கு பாராளுமன்றமாக இருக்கும். மறுபுறத்தில் தத்தமது செல்வாக்கு எந்தளவுக்கு இருக்கின்றது என்பதைத் தெரிந்த பின்னர், எத்தகைய கூட்டணி ஒன்றை ஏற்படுத்தினால் யார் வெல்லலாம் என்று கணக்குப் போட்டு ஜனாதிபதி தேர்தலில் கூட்டணி அமைக்க உதவும் என்று ஜனாதிபதி கணக்குப் போடுகிறார் என்றும் தெற்கில் நம்பப்படுகின்றது.

பாராளுமன்றத்திற்கு அவ்வாறு தேர்தல் முதலில் அறிவிக்கப்பட்டால் நமது தமிழ் அரசு கட்சியின் நிலை எப்படியிருக்கும் என்பதை இப்போது கணிப்பது சற்றுக் கடினமானதுதான். வழக்குகள் வாபஸ் பெறப்பட்டு பொதுச்சபை கூடி ஒரு பொது இணக்கப்பாடு ஏற்பட்டாக வேண்டும். அவ்வாறு செய்யாவிட்டால் கட்சி யாப்பின்படி இரண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறை கூட்டப்படவேண்டிய வருடாந்த மாநாடு கூட்டப்படவில்லை என்றும் தற்போது இருக்கும் தலைவர் பொதுச் செயலாளர் உட்பட்ட செயல் குழு இயங்குவதை தடை செய்யவேண்டும் என்றும் யாராவது ஒருவர் இன்னுமொரு வழக்கைத் தாக்கல் செய்தாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை. அதிகம் ஏன் தேர்தல் ஆணைக்குழுவுக்கு முறைப்பாடு செய்தாலும் கட்சி சிக்கலுக்குள்தான் அகப்பட வேண்டியிருக்கும்.

இது தமிழ் மக்களின் பிரதான கட்சியான தமிழ் அரசின் இன்றைய நிலை. சிலவேளைகளில், தமிழர் விடுதலைக் கூட்டணியுடன் ஏற்பட்ட சிக்கலைத் தொடர்ந்து தமிழ் அரசுக் கட்சியை தூசி தட்டி எடுத்ததுபோல, ஏதாவது ஒரு தற்காலிக ஏற்பாடு செய்யவேண்டி வருமோ தெரியவில்லை.

தமிழ்த் தேசிய அரசியலை நேசிக்கின்ற எவரும் தமிழ் அரசின் இன்றைய நிலையை எண்ணி கவலையடையாமல் இருக்க முடியாது.

அதுவல்ல, இன்று நாம் சொல்ல வருவது,

ஜனாதிபதி தேர்தலா? பாராளுமன்ற தேர்தலா? அதுவும் இல்லாமல் முதலில் நிறைவேற்று அதிகாரத்தை இரத்துச் செய்ய அனுமதி கோரும் சர்வஜன வாக்கெடுப்பா முதலில் நடைபெறும் என்று தெரியாமல் தெற்கு அரசியல் கட்சிகள் குழுப்பிப்போய் இருக்க, அப்படி எதுதான் முதலில் நடக்கும் என்று ஜனாதிபதிக்கு நெருக்கமான வட்டாரங்களில் கேட்டபோது, சிரித்துக்கொண்டே ‘இல்லை இல்லை முதலில் திட்டமிட்டவாறு ஜனாதிபதித் தேர்தல்தான் நடக்கும்’ என்றது ஒரு தரப்பு.

தெற்கில் கட்சிகளை குழப்பத்தில் வைத்திருக்க வழக்கமான தனது அரசியல் உத்தியையே ஜனாதிபதி ரணில் பயன்படுத்தி வருகின்றார் என்றது மற்றுமொரு தரப்பு. எது எப்படியோ, கட்சிகளைப் பிரித்து தனது பலத்தை அதிகரிக்கும் வரை இதுபோன்ற குழப்பமான நிலையே தொடர்ந்து பேணப்படும் என்கின்றன தெற்கின் விசயமறிந்த வட்டாரங்கள்.

ஜனாதிபதியின் இந்த முயற்சியால் உண்மையில் கலகலத்துப் போயிருப்பது பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்திதான். அந்தக் கட்சிக்குள்தான் இப்போது பலரும் குழம்பிப் போயிருக்கின்றனராம். அந்தக் குழப்பத்தைத் தவிர்க்கவே அவசரம் அவசரமாக சிறுபான்மைக் கட்சிகளுடன் ஒப்பந்தம் போடும் முயற்சியை தொடங்கினாராம் கட்சியின் தலைவர். சிறுபான்மைக் கட்சிகள் தன்னோடுதான் இருக்கின்றன என்பதை சொல்வதன் மூலம் தனது கட்சிக்குள் ஏற்படும் பிளவை தடுக்கலாம் என்று நினைக்கின்றார் போலும்.

இலங்கை அரசியலில் எப்போதுமே இந்த சிறுபான்மைக் கட்சிகள் இதுபோன்ற நெருக்கடிக்கு உதவுவதற்கு பயன்படுத்தப்படுகின்றனவே தவிர, அவர்களின் சொந்த தேவைகளுக்காக அல்ல என்பதும் நமக்கு வழக்கமானதுதானே.

**- ஊர்க்குருவி.**

# சித்திரை புத்தாண்டை மகிழ்வுடன் கொண்டாட மதுபானங்களின் விலைகளை குறைக்க வேண்டும்

## இராஜாங்க அமைச்சர் ஜனாதிபதியிடம் வலியுறுத்தல்

கொழும்பு, பெப். 23

பொருளாதார நெருக்கடியினால் நாட்டு மக்கள் கடந்த மூன்றாண்டு காலமாக மகிழ்ச்சியுடன் பண்டிகைகளைக் கொண்டாடவில்லை. இந்த ஆண்டு சித்திரை புத்தாண்டை மகிழ்வுடன் கொண்டாட மதுபானங்களின் விலைகளைக் குறைக்க வேண்டும். இந்த பணிவான கோரிக்கையை ஜனாதிபதி நிறைவேற்ற வேண்டும் என கைத்தொழில் இராஜாங்க அமைச்சர் சாமர சம்பத் தஸநாயக்க தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் இடம்பெற்ற நாட்டின் தற்போதைய நிலைவரம் தொடர்பான சபை ஒத்துழைப்பு விவாதத்தில் உரையாற்று கையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

மத்திய வங்கியின் ஆளுநரின் சம்பளம் அதிகரிப்பு தொடர்பில் மாறுபட்ட கருத்துக்கள் குறிப்பிடப்படுகின்றன. நாடு மிக மோசமான பொருளாதார நெருக்கடியை எதிர்க்கொண்ட வேளையில் அவர் தான் பொருளாதார மீட்சிக்கான பொறுப்பை ஏற்றார். ஆகவே கடந்து வந்த பாதையை மறந்து விடக் கூடாது.

பொருளாதார நெருக்கடியிலிருந்து நாடு தற்போது மீண்டுள்ளது. தற்போதைய முன்னேற்றத்தைத் தொடர வேண்டும்.

பொருளாதாரம் முன்னேற்றமடைந்ததன் பின்னர் அரசாங்கத்தை பொறுப்பேற்கத் தயார் என்று எதிர்க்கட்சித் தலைவர், மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர் ஆகியோர் குறிப்பிடுகிறார்கள். கூட்டத்தை கூட்டுவதால் ஜனாதிபதியாகி விட முடியாது என்பதை எதிரணியின் ஜனாதிபதி வேட்பாளர்கள் நினைவில் வைத்துக் கொள்ள வேண்டும். எமது ஜனாதிபதி வேட்பாளர் ரணில் விக்கிரமசிங்க என்பதில் மாற்றமில்லை.

பொருளாதார பாதிப்பு காரணமாக நாட்டு மக்கள் கடந்த மூன்றாண்டுக் காலமாக நிம்மதியாக இல்லை. மகிழ்ச்சியுடன் பண்டிகைகளைப் புத்தாண்டை கொண்டாடவுமில்லை.

மதுபானங்களின் விலை அதிகரிக்கப்பட்டதால் சட்டவிரோத மதுபான உற்பத்திகள் அதிகரித்துள்ளன. நாடு தற்போது நெருக்கடியிலிருந்து மீண்டுள்ளது. ஆகவே இம்முறை சித்திரை புத்தாண்டை மகிழ்வுடன் கொண்டாட மதுபானங்களின் விலைகளைக் குறைக்க வேண்டும். ஆகவே இந்த பணிவான வேண்டுகோளை ஜனாதிபதி நிறைவேற்ற வேண்டும்-என்றார்.

(அ)

# கடேற் பயிற்சி மையத்தில் மோதல்

கொழும்பு, பெப். 23

ரந்தெம்பே தேசிய கடேற் பயிற்சி நிலையத்தில் பயிற்சிக்காக வந்த பாடசாலை மாணவர்களுக்கிடையில் ஏற்பட்ட மோதலில் 17 சிறுவர்கள் சிறு காயங்களுக்குள்ளாகி மஹியங்கனை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். அனுமதிக்கப்பட்ட மாணவர்கள் அனைவரும் சிறு காயங்களுக்கு உள்ளாகியுள்ளனர்.

மாணவர்கள் எவருக்கும் பெரிய காயம் இல்லை என்றும் சிறிய காயங்கள் மட்டுமே உள்ளதாகவும் கூறப்படுகிறது.

இருதரப்பு மாணவர்களுக்கிடையில் இடம்பெற்ற சிறு சம்பவமொன்று மோதலாக மாறியுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

நாடு முழுவதிலும் உள்ள பாடசாலைகளில் இருந்து மாணவர்கள் ரந்தெம்பே தேசிய கடேற் பயிற்சி நிலையத்தில் பயிற்சிக்காக வந்துள்ளனர். மோதல் சம்பவம் தொடர்பில் ஹசலக பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

(அ)

# கட்டைக்காட்டில் ஒதுங்கிய கூம்பு வடிவிலான கூடாரம்



யாழ்ப்பாணம், பெப். 23

வடமராட்சி கிழக்கு கட்டைக்காடு கடற்பகுதியில் இரும்பாலான கூம்பு வடிவிலான கூடாரம் ஒன்று நேற்று வியாழக்கிழமை காலை கரையொதுங்கியுள்ளது.

மீன்பிடிப்பதற்காக கடலுக்கு சென்ற மீனவர்கள் இதனை அவதானித்து உடனடியாக வெற்றிலைக்கேணி கடற்படையினருக்கு அறிவித்தனர்.

இரும்பாலான குறித்த மிதக்கும் கூடாரத்தை கட்டைக்காடு மீனவர்கள் தங்களது முயற்சியால் கரைக்கு கொண்டு வருவம் மீனவர்களின் முயற்சி தோல்வியுற்றதால் கூடாரத்தை அகற்றும் முயற்சியில் வெற்றிலைக்கேணி கடற்படையினர் ஈடுபட்டு அதனை அப்புறப்படுத்தினர்.

அண்மைக் காலமாக வடமராட்சி கிழக்கில் கரையொதுங்கிய இவ்வாறான கூடாரங்களில் தாய்லாந்து கொடி காணப்பட்டதோடு கரையொதுங்கிய இந்த கூடாரத்தில் எந்தவிதமான கொடியும் காணப்படவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது.

(அ)

# அலிசப்ரி எம். பியின் மனுமீதான தீர்ப்பு மார்ச் 7இல்

கொழும்பு, பெப். 23

தமது கட்சி உறுப்புரிமையை ரத்து செய்து பாராளுமன்ற உறுப்புரிமையை நீக்குவதற்கு தடைவிதித்து உத்தரவிடக் கோரி அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் பாராளுமன்ற உறுப்பினர் அலிசப்ரி ரஹீம் தாக்கல் செய்துள்ள மனு மீதான தீர்ப்பு எதிர்வரும் மார்ச் 07ஆம் திகதி அறிவிக்கப்படும் என கொழும்பு மாவட்ட நீதிமன்றம் தெரிவித்துள்ளது.

குறித்த மனு மீதான விசாரணை கொழும்பு மாவட்ட நீதிமன்றில் நேற்று விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட போதே இந்த தீர்மானம் அறிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த ஆண்டு மே மாதம் 23ஆம் திகதி டுபாயிற்கு சென்று மீள நாடு திரும்பிய போது சட்டவிரோத தங்கத்துடன் அவர் கைது செய்யப்பட்டார். (அ)

# லொத்தர் சீட்டு விற்பனை நிலையம் தீக்கிரை!

முல்லைத்தீவு, பெப். 23

முல்லைத்தீவு, வள்ளிபுனம் பகுதியில் லொத்தர் சீட்டு விற்பனை நிலையம் ஒன்று தீக்கிரையாக்கப்பட்ட சம்பவம் ஒன்று இடம்பெற்றுள்ளது.

முல்லைத்தீவு புதுக்குடியிருப்பு பொலிஸ் பிரிவுக்குட்பட்ட வள்ளிபுனம் பகுதியில் அமைந்துள்ள லொத்தர் சீட்டு விற்பனை நிலையம் ஒன்று சந்தேகத்திற்கு இடமான முறையில் தீக்கிரையாக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இந்த சம்பவத்தில் அங்கிருந்த கதிரை, மேசை ஒன்றும், 120 லொத்தர் சீட்டுக்களும் தீக்கிரையாகின.

சம்பவம் தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

(அ)

Eelanadu
23.02.2024 வெள்ளிக்கிழமை
சோபகிருது வருடம், மாசி 11

**“ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்”**
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 205 2300

# 13இன் காவல்துறை அதிகாரம்

பிவித்துரு ஹெல உறுமய கட்சியின் தலைவரும், தீவிர சிங்கள இனவாதத்தின் முகமாகவும் இருக்கின்ற உதய கம்மன்பில, 13ஆவது திருத்தச் சட்டத்திலிருக்கும் காவல்துறை அதிகாரத்தை நீக்குவதற்காக 22ஆவது திருத்தச்சட்டத்தை பாராளுமன்றத்தில், ஒரு தனிநபர் பிரேரணையாக சமர்ப்பித்திருக்கின்றார். அது விவாதத்துக்கு எடுத்துக்கொள்ளப்படுமா - எடுத்துக்கொள்ளப் பட்டாலும் மூன்றில் இரண்டு பெரும்பான்மை ஆதரவைப் பெறுமா என்பதெல்லாம் கேள்விகளாக இருந்தாலும்கூட, இப்போதும் அரசமைப்பிலுள்ள 13ஆவது திருத்தச்சட்டத்தை ஒரு பேசுபொருளாக்கும் நிலையில்தான் தென்னிலங்கை இருக்கின்றது என்பதைத்தான் தமிழர் சமூகம் புரிந்து கொள்ள வேண்டும்.

13ஆவது திருத்தத்தில் ஒன்றுமில்லை, அதனை ஓர் ஆரம்பப் புள்ளியாகக்கூட ஏற்றுக்கொள்ள முடியாதென்று தமிழ்த் தேசியர்கள் என்போர் கூறிக்கொண்டிருக்கும்போது, மறுபுறம், 13ஆவது திருத்தத்திலுள்ள காவல்துறை அதிகாரத்தால் நாட்டின் தேசிய பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் என்று கூறி, தனிநபர் பிரேரணை ஒன்று கொண்டுவரப்பட்டுள்ளது. ரணில் விக்கிரமசிங்க 13ஆவது திருத்தத்தை அமுல்படுத்தப் போவதாகக் கூறியிருக்கும் நிலையில்தான் உதய கம்மன்பில இவ்வாறானதொரு பிரேரணையை கொண்டு வந்திருக்கின்றார்.

13ஆவது திருத்தத்தை எதிர்க்கும் சிங்கள தரப்புகளோ அது தமிழர்களுக்கு அதிக அதிகாரத்தை வழங்குகின்றது என்றவாறான அச்சங்களை வெளியிடுகின்றனர் - ஆனால், மறுபுறமோ, தமிழ் அரசியல் சமூகத்திலுள்ள ஒரு தரப்பினரோ 13ஆவது திருத்தத்தை தாண்டிச் செல்ல வேண்டும் என்கின்றனர் - ஆனால், அவ்வாறு கூறுபவர்களுக்கோ எவ்வாறு தாண்டிச் செல்வது என்று கூறத் தெரியவில்லை. இந்த அடிப்படையில்தான் 13ஆவது திருத்தச்சட்டம் இலங்கை அரசியலில் அனைவரும் உச்சரிக்கும் ஒரு விடயமாக இருக்கின்றது.

ஜனாதிபதி தேர்தல் நெருங்கிவரும் நிலையில்தான் வீழ்ந்து கிடக்கும் சிங்கள இனவாத அரசியலுக்கு புத்துணர்ச்சியூட்டும் ஒரு துருப்புச்சீட்டாக காவல்துறை அதிகாரத்தை கம்மன்பில அணியினர் கையிலெடுத்திருக்கின்றனர். நாட்டை பாதுகாக்கும் அனைவரும் ஓரணியில் வாருங்கள் - இதனை எதிர்ப்பதற்காக அணிதிரளுங்கள் என்றும் அவர்கள் அறிவிக்கலாம்.

இவ்வாறான சந்தர்ப்பத்தில் ஒரு கேள்வி கேள்வி எழுகின்றது - தமிழ் மக்கள் வழமைபோல் தென்னிலங்கை வாக்காளர்களுக்கு எவ்வித உடன்பாடும் இல்லாமல் வாக்களிக்கப் போகின்றனரா - தமிழ் கட்சிகள் தமிழ் மக்களை எவ்வாறு வழிநடத்தப் போகின்றன? அரசமைப்பிலுள்ள 13ஆவது திருத்தச்சட்டத்தை, அது கொண்டுவரப்பட்டபோது இருந்தவாறு நடைமுறைப்படுத்தும் வாக்குறுதியை தருபவர்களுக்கு - குறிப்பாக அதனை தங்களின் தேர்தல் விஞ்ஞாபனத்தில் சேர்ப்பவர்களுக்கே நாங்கள் வாக்களிப்போம் - இல்லாவிட்டால் தமிழ் மக்கள் ஒரு தமிழ் பொது வேட்பாளருக்கே வாக்களிப்பர் - என்றவாறான தீர்மானத்தை எடுக்க வேண்டும். இது ஒன்றுதான் தமிழ் மக்களுக்கு முன்னாலுள்ள தெரிவாக இருக்க முடியும். இவ்வாறானதொரு தீர்மானத்தின் பின்னால் தமிழ் மக்களை அணிதிரட்டக்கூடிய ஆளுமையுடன் தமிழ் கட்சிகள் இருக்கின்றனவா?

# இந்திய மீனவர்களை தடுக்காவிடின் அசம்பாவிதங்களை தடுக்க முடியாது

## யாழ்ப்பாணம் மீனவர்கள் எச்சரிக்கை

*யாழ்ப்பாணம், பெப். 23*

எல்லை மீறும் இந்திய இழுவைப் படகுகளை தடுக்க நடவடிக்கை எடுக்காவிடின் கடலில் அசம்பாவிதங்கள் இடம்பெறுவதை தடுக்க முடியாமல்போகும் என யாழ். மீனவர்கள் எச்சரித்துள்ளனர்.

இந்திய இழுவைப் படகுகள் எல்லைமீறி இலங்கையின் வடக்கு கடலில் மீன் பிடியில் ஈடுபடுவதை தடுத்து, வடக்கு தமிழ் மீனவர்களின் வாழ்வாதாரத்தை காப்பாற்றுமாறு யாழ்ப்பாணம் மாவட்ட கடற்தொழிலாளர் சமாசங்களின் சம்மேளன உப தலைவர் அத்தோனிப்பிள்ளை பிரான்சிஸ் ரட்ணகுமார் குறிப்பிட்டுள்ளார்.

“நாங்கள் இந்திய இழுவைப் படகால் சாகப் போகின்றோம். இது தொடர் போராட்டமாகத்தான் மாறப்போகிறது. ஒருசில நாட்களில் முடிவு தராவிட்டால், ஒரு சில நாட்களில் முடிவு தரவேண்டும். தராத பட்சத்தில் தொடர் போராட்டம் ஒன்று நடக்கும். கடலில் அசம்பாவிதங்களும் நடக்கும்”

யாழ்ப்பாணத்தில் உள்ள இந்திய துணை உயர்ஸ்தானிகர் அலுவலகத்தை முற்கையிட்டு யாழ்ப்பாணம் மாவட்ட கடற்றொழிலாளர் அமைப்புகள் போராட்டத்தை முன்னெடுத்தன.

இலங்கை கடல் எல்லைக்குள் அத்துமீறும் இந்திய இழுவைப் படகுகளை தடுத்து நிறுத்தக் கோரி, “இந்திய அரசே எமது கடல் வளத்தை சூறையாடாதே எம்மையும் வாழ விடு” உள்ளிட்ட வாசகங்கள் அடங்கிய பதாதைகளைத் தாங்கியவாறு போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

யாழ். மருதடி வீடியின் சந்தியில் இருந்து ஆரம்பமான மீனவர்களின் பேரணி துணை உயர்ஸ்தானிகர் அலுவலகத்தை அடைந்த போது, பொலிஸார் அவர்களை அலுவலகத்திற்குள் செல்ல முடியாதவாறு தடுத்ததோடு, கடற்றொழில் அமைப்புகளின் எட்டு பிரதிநிதிகள் மாத்திரம் இந்திய துணை உயர்ஸ்தானிகர் ஜே. ராகேஷ் நட்ராஜை சந்திக்க அனுமதித்தனர்.

இந்திய துணை உயர்ஸ்தானிகரிடம் தமது பிரச்னைகளைத் தெளிவுபடுத்திய மீனவர் சங்கங்களின் பிரதிநிதிகள் கோரிக்கைகள் அடங்கிய மஜரையும் கையளித்தனர்.

இதேவேளை, இந்திய மீனவர்களை கட்டுப்படுத்துவதில் இலங்கை கடற்படையினரின் அசமந்தப் போக்குத் தொடர்பிலும் மீனவர் சங்கத் தலைவர்கள் தமது அதிருப்தியை வெளிப்படுத்தியுள்ளனர்.

“எமது கடற்படையிடம் நாங்கள் தாழ்மையாக கேட்டுக்கொள்வது, தங்களால் மேற்கொள்ளப்படும் கைது நடவடிக்கைகள் எங்களுக்கு பூரண திருப்தியை அளிக்கவில்லை. கைதுகள் மேலும் தொடர வேண்டும். கைதுகள் பெரியளவில் மேற்கொள்ளப்பட வேண்டும். அவ்வாறு நீங்கள் செயல்படும்போது எமது மக்களின் வாழ்வாதாரத்தை காப்பாற்றவும், துன்பங்களை கலைவதற்கும் அது உறுதுணையாக அமையும்.” என போராட்டத்தில் பங்கேற்ற, யாழ்ப்பாணம் மாவட்ட கடற்தொழிலாளர் சமாசங்களின் சம்மேளனத் தலைவர் சிறீகந்தவேல் புனிதப்பிரகாஷ் தெரிவித்துள்ளார்.

(அ)

# ஆண்டு இறுதியில் பணவீக்கம் 5வீதத்தை எட்டும்

*கொழும்பு, பெப். 23*

இலங்கையின் பணவீக்கம் இந்த ஆண்டின் இறுதி இரு காலாண்டுகளில் அரசாங்கத்தின் இலக்கான 5 வீதத்தை நோக்கி திரும்பும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இலங்கை மத்திய வங்கி அதிகாரியொருவரின் தகவலை மேற்கொள்காட்டி ரொய்ட்டர்ஸ் செய்திச் சேவை புதன்கிழமை இந்த தகவலை தெரிவித்துள்ளது.


கடுமையான அன்னியச் செலாவணி பற்றாக் குறையால் 2022 இல் பொருளாதாரம் வீழ்ச்சியடைந்தது.

அதன் பின்னர், 2.9 பில்லியன் அமெரிக்க டொலர் சர்வதேச நாணய நிதியத்தின் திட்ட உதவியுடன், அண்மைய மாதங்களில் பொருளாதாரம் மீட்சிக்கான அறிகுறிகளைக் காட்டியுள்ளது.

இந்நிலையில் நடுத்தர காலத்தில் பணவீக்கம் 5 சதவீதத்தை எட்டும் என்று கணிக்கப்பட்டுள்ளது, இது மூன்றாம் காலாண்டில் இருந்து ஆண்டின் இறுதி வரை தொடரும் என்றும் எதிர்பார்க்கப்படுவதாக இலங்கை மத்திய வங்கியின் பொருளாதார ஆராய்ச்சி துறையின் பணிப்பாளர் எஸ். ஜெகஜீவன் ரொய்ட்டர்ஸிடம் கூறியுள்ளார்.

வரி அதிகரிப்புகளின் உயர் அடிப்படை விளைவு 2025 ஆம் ஆண்டின் தொடக்கத்தில் பணவீக்கத்திற்கு பயனளிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது, மேலும் அது பண வீக்கத்தை 5 வீதத்துக்கும் குறைவாக கொண்டு வரும் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது. (அ)

# அப்புக்குட்டி அண்ணையின் ‘டவுட்’






**மேடம்**
எதிர்பார்த்தவைகளில் சில தள்ளிப் போனாலும் எதிர்பாராத ஒரு வேலை முடியும். வியாபாரத்தில் அதிரடி சலுகைகள் மூலம் லாபமடைவீர்கள். மறுக்கப்பட்ட உரிமைகள் கிடைக்கும்.

**இடபம்**
தைரியமாக சில முக்கிய முடிவுகள் எடுப்பீர்கள். உடன்பிறந்தவர்கள் உங்கள் வேலைகளைப் பிரித்துக் கொள்வார்கள். அலுவலகத்தில் அதிகாரிகள் முன்வைத்த கோரிக்கை நிறைவேறும்.

**மிதுனம்**
கடந்த 2 நாட்களாக் இருந்த அலைச்சல் டென்ஷன் யாவும் நீங்கும். வியாபாரத்தில் புதிய சரக்குகள் கொள்முதல் செய்வீர்கள். உத்தியோகத்தில் புது வாய்ப்புகள் தேடி வரும். உற்சாகமான நாள்.

**கடகம்**
ராசிக்குள் சந்திரன் நீடிப்பதால் வேலைச்சுமை இருந்துக் கொண்டேயிருப்பதாக ஆதங்கப்படுவீர்கள். கூடுதல் கவனம் செலுத்துவது நல்லது அதிகாரிகள் உங்களுக்கு ஒத்துழைப்பார்கள்.

**சிம்மம்**
எடுத்த வேலையை முடிப்பதற்குள் அலைச்சல் அதிகரிக்கும். வியாபாரத்தில் போட்டிகளையும் தாண்டி ஓரளவு லாபம் வரும். பணிகளை போராடி முடிப்பீர்கள். போராடி வெல்லும் நாள்.

**கன்னி**
எதிர்பார்ப்புகள் நிறைவேறும். பெற்றோர் பக்கபலமாக இருப்பார்கள். வியாபாரத்தில் வாடிக்கையாளர்கள் தேடி வருவார்கள். அதிகாரிகள் முக்கியத்துவம் தருவார்கள். லாபம் பெருகும் நாள்.

**துலாம்**
அனுபவபூர்வமாகவும், அறிவுப்பூர்வமாகவும் பேசி எல்லோரையும் கவர்வீர்கள். வியாபாரத்தில் வேலையாட்களை தட்டிக் கொடுத்து வேலை வாங்குவீர்கள். மரியாதைக் கூடும். சாதிக்கும் நாள்.

**விருட்சிகம்**
கடந்த 2 நாட்களாக கணவன் - மனைவிக்குள் இருந்த மனப்போர் நீங்கும். உறவினர்கள் வீடு தேடி வருவார்கள். உயரதிகாரிகள் உங்களை மதித்துப் பேசுவார்கள். புதிய மாற்றம் ஏற்படும் நாள்.

**தனுசு**
சந்திராஷ்டமம் இருப்பதால் மற்றவர்களை நம்பி முக்கிய முடிவுகளை எடுக்க வேண்டாம். உத்தியோகத்தில் மேலதிகாரி குறை கூறுவார். விழிப்புடன் செயல்பட வேண்டிய நாள்.

**மகரம்**
உங்கள் பலம் பலவீனத்தை உணர்வீர்கள். மனைவி வழியில் நல்ல செய்தி உண்டு. வியாபாரத்தில் விஜபிகள் வாடிக்கையாளர் ஆவார்கள். சலுகைகள் கிடைக்கும். மகிழ்ச்சியான நாள்.

**கும்பம்**
குடும்பத்தில் உங்கள் வார்த்தைக்கு மதிப்பு கூடும். அதிகாரப் பதவியில் இருப்பவர்கள் அறிமுகமாவார்கள். உத்தியோகத்தில் பெரிய பொறுப்புகள் தேடி வரும். சாதிக்கும் நாள்.

**மீனம்**
பிள்ளைகளின் உயர்கல்வி உத்தியோகம் குறித்து யோசிப்பீர்கள். வியாபாரத்தில் புதிய வாடிக்கையாளர்கள் வருவார்கள். சக ஊழியர்கள் ஒத்துழைப்பார்கள். கனவு நனவாகும் நாள்.

# இந்திய பக்தர்களின் கச்சதீவு பயணம் இரத்து

இராமேஸ்வரம், பெப். 23

இராமேஸ்வரம் விசைப்படகு மீனவர்களின் தொடர் வேலை நிறுத்தப் போராட்டத்தால் இந்திய பக்தர்கள் கச்சதீவு திருவிழாவுக்குச் செல்லும் பயணம் இரத்து செய்யப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

கச்சதீவு அந்தோணியார் ஆலயத் திருவிழா இன்றும் நாளையும் நடைபெறுக்கிறது. இதில் இலங்கை, இந்திய பக்தர்கள் கலந்துகொள்வது வழக்கம். இதற்காக, யாழ்ப்பாணம் மறைமாவட்ட ஆயர் ஜஸ்ரின் ஞானப்பிரகாசம் ஆண்டகை இந்திய பக்தர்கள் கலந்து கொள்வதற்காக இராமேஸ்வரம் வேர்க்கோடு பங்குக்கு அழைப்பு விடுத்திருந்தார்.

இதை ஏற்று இராமநாதபுரம் மாவட்ட ஆட்சியர் அலுவலகம் மூலம், இராமேஸ்வரம் - வேர்க்கோடு பங்குத்தந்தை சந்தியாகு தலைமையில் கச்சதீவு திருவிழாவுக்கான பயண ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டன. 75 விசைப்படகு, 28 நாட்டுப் படகுகளில் 3,455 பயணிகள் திருவிழாவில் பங்கேற்கப் பதிவு செய்திருந்தனர்.

இந்நிலையில், இராமேஸ்வரம் விசைப்படகு மீனவர்கள் 3 பேருக்கு இலங்கை நீதிமன்றம் சிறைத் தண்டனை விதித்தது. இந்த தீர்ப்பை இரத்து செய்து, மீனவர்களை விடுதலை செய்ய வலியுறுத்தி இராமேஸ்வரம் விசைப்படகு மீனவர்கள் தொடர் வேலைநிறுத்தப் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர். அத்துடன், கச்சதீவு திருவிழாவைப் புறக்கணிப்பதாகவும், பயணத்துக்கான விசைப் படகுகளையும் வழங்க மாட்டோம் என்றும் அறிவித்தனர்.

இது தொடர்பில் வேர்க்கோடு பங்குத்தந்தை தெரிவிக்கையில்,

இராமேஸ்வரம் மீனவர்களின் தொடர் வேலைநிறுத்தப் போராட்டத்தால் கச்சதீவு திருவிழாவுக்குப் பயணிகளை அழைத்துச் செல்ல முடியாது. எனவே, இராமேஸ்வரத்திலிருந்து செல்லவிருந்த திருப்பயணம் இரத்து செய்யப்படுகிறது.

கச்சதீவு திருவிழாவில் பங்கேற்பதற்காக வெளி மாநிலம், வெளி மாவட்டங்களிலிருந்து பதிவு செய்திருந்த பயணிகள், இராமேஸ்வரம் வர வேண்டாம். பயணிகளிடம் வசூலிக்கப்பட்ட பயணத் தொகையை, வசூலித்தவர்கள் மூலமாகவே திருப்பிக் கொடுக்கநடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது - என்றார். (ஐ)

# கருத்து வேறுபாடுகளுக்கு மத்தியில் ஸ்டாலின் - மோடி ஒரே மேடையில்!

நெல்லை, பெப். 23

இஸ்ரோவின் இரண்டாவது ஏவூர்தி ஏவுதளம் குலசேகர பட்டினத்தில் அமைக்கப்படவுள்ள நிலையில், இதற்கான அடிக்கல்லை வரும் 28ஆம் திகதி பிரதமர் மோடி நாட்டி வைக்கவுள்ளார்.

இந்த நிகழ்ச்சியில் முதல்வர் ஸ்டாலின் பங்கேற்க இருக்கிறார். பல்வேறு அரசியல் கருத்து வேறுபாடுகளுக்கு மத்தியிலும் இந்நிகழ்ச்சியில் பிரதமரும் முதல்வர் ஸ்டாலினும் பங்கேற்கவுள்ளனர்.

வரும் 27, 28ஆம் திகதிகளில் தமிழகத்தில் பிரதமர் மோடி சுற்றுப்பயணம் மேற்கொள்கிறார். வரும் 27ஆம் திகதி திருப்பூர் மாவட்டம் பல்லடத்தில் நடைபெறும் பா. ஜ. க. பொதுக் கூட்டத்தில் பங்கேற்கும் அவர், அன்றிரவு சூலூரில் உள்ள இந்திய விமானப்படை தளத்தில் தங்குவார். (ஐ)

# இரட்டை இலை சின்னத்தை யாராலும் முடக்க முடியாது!

## அ. தி. மு. க. பொதுச் செயலர்



மதுரை, பெப். 23

இரட்டை இலை சின்னத்தை யாராலும் முடக்க முடியாது என்று அ. தி. மு. க. பொதுச் செயலாளர் பழனிசாமி கூறினார்.

செய்தியாளர்களை நேற்று சந்தித்த அவர்,

முதல்வர் ஸ்டாலின் மதுரைக்கு அறிவித்த திட்டங்கள் இதுவரை செயல்பாட்டுக்கு வரவில்லை.

பா. ஜ. கவில் இருந்து பலரும் அ. தி. மு. கவில் இணைகின்றனர். கட்சி மாறுவது ஜனநாயக உரிமை. அதேபோல, போகிறவர்களையும் தடுக்க முடியாது.

தி. மு. கவில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்தவர்கள்தான் அதிகாரத்தில் இருக்கின்றனர். அது கட்சி அல்ல, கம்பனி. தி. மு. க. வாரிசு அரசியல் செய்கிறது. ஒரு குடும்பத்துக்குள் கட்சி போகக்கூடாது என்பதுதான் எங்கள் கொள்கை. அ. தி. மு. கவில் சாதாரண தொண்டன் கூட, என்னைப் போன்று உயர்ந்த பொறுப்புக்கு வரமுடியும்.

மக்களவைத் தேர்தல் அறிவித்தபின்புதான் கூட்டணி குறித்து முடிவாகும். மக்களவைத் தேர்தலில் பிரதமர் வேட்பாளரை முன்னிறுத்திதான் வாக்குக் கேட்க வேண்டும் என்பதில்லை. 2014இல் பிரதமர் வேட்பாளரை முன்னிறுத்தி ஜெயலலிதா வாக்கு கேட்கவில்லை.

சசிகலா, ஓ. பி. எஸ். காரில் அ. தி. மு. க. கொடி கட்டிப் பயணிப்பதாக ஆதாரபூர்வ தகவல் இல்லை. அப்படியிருந்தால், அதை நாங்கள் பார்த்துக் கொள்கிறோம். தி. மு. க. தலைமையிலான கூட்டணியில் இன்னும் பேச்சு முடியவில்லை. திமுக கூட்டணியில் இருந்து எத்தனை கட்சிகள் வெளியே செல்கின்றன என்பதை பொறுத்திருந்து பாருங்கள். இரட்டை இலைச் சின்னத்தை யாராலும் முடக்க முடியாது. உயர்நீதிமன்ற, உச்ச நீதிமன்ற தீர்ப்புக்குப்பின்பு அவரின் (ஓ. பி. எஸ்.) ஆசைநிறைவேறாது. அது நிராசையாகவே முடியும்.

மேகதாது அணை விவகாரத்தில் துரோகம் செய்தது திமுக அரசு. அந்தப் பிரச்னையில் எங்கு, எதைப் பேச வேண்டுமோ, அதைப் பேச தி. மு. க. தவறிவிட்டது - என்றார். (ஐ)

# இலங்கை ஒருபோதும் இந்திய மாநிலமாகாது!

## எஸ்.பி. திஸாநாயக்க சூளுரை



கொழும்பு, பெப். 23

**“வரலாற்றில் இந்திய ஆக்கிரமிப்புக்கு எதிராக போரிட்ட நாடுதான் எமது நாடு. எனவே, இலங்கை ஒருபோதும் இந்தியாவின் பிராந்தியம் ஆகாது. அதற்கு நாம் இடமளிக்கவும் மாட்டோம்.” - என்று பொதுஜன பெரமுன கட்சி அறிவித்துள்ளது.**

அக்கட்சியின் தலைமையகத்தில் நடைபெற்ற ஊடக சந்திப்பின்போது அமைச்சர் ஹரின் பெர்ணான்டோ வெளியிட்டுள்ளார் எனக் கூறப்படும் கருத்து தொடர்பில் எழுப்பட்ட கேள்விக்கு பதிலளிக்கையிலேயே பாராளுமன்ற உறுப்பினர் எஸ்.பி. திஸாநாயக்க இவ்வாறு கூறினார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியவை வருமாறு,

“ இலங்கை என்பது இறைமையுள்ள சுயாதீன நாடாகும். நமது நாடு ஒருபோதும் இந்தியாவின் பிராந்தியமாகாது. அவ்வாறு செய்வதற்கு எவரேனும் முற்பட்டால் அதற்கு இடமளிக்கமாட்டோம்.

வரலாற்றில் இந்திய ஆக்கிரமிப்புக்கு எதிராக போரிட்ட நாடுதான் எமது நாடு. பொலன்னறுவை, அநுராதபுர யுகங்களின்போது இந்திய ஆக்கிரமிப்பாளர்களுக்கு எதிராக எமது மன்னர்கள் சமரிட்டுள்ளனர்.

ஹரின் பெர்ணான்டோ எமது கட்சி உறுப்பினர் அல்லர். அவர் ஐக்கிய தேசியக் கட்சி உறுப்பினர். அவர் வெளியிடும் கருத்து தொடர்பில் நாம் கணக்கில் எடுப்பதில்லை. அவ்வாறான நபர்களிடம் காத்திரமான கருத்துகளை எதிர்பார்க்க முடியாது.” - என்றார்.

(அ)



# இலங்கை - வியட்நாம் புரிந்துணர்வு ஒப்பந்தம்!

கொழும்பு, பெப். 23

விவசாய தொழிநுட்பப் பரிமாற்றம் தொடர்பில் இலங்கை மற்றும் வியட்நாம் ஆகிய நாடுகளுக்கிடையில் புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டுள்ளது.

ஐக்கிய நாடுகளின் உணவு மற்றும் விவசாய அமைப்பின் 37 ஆவது மாநாடு கொழும்பில் இடம்பெற்று வருகின்ற நிலையில் இந்த ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டுள்ளது.

இதன்படி விவசாய அமைச்சர் மஹிந்த அமரவீர மற்றும் வியட்நாம் நாட்டின் விவசாயத் துறை உட்பட கிராம அபிவிருத்தி அமைச்சர் மின்மொஹான் ஆகியோர் நேற்று ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டுள்ளனர்.

விவசாய தொழினுட்ப தொடர்பிலான ஆய்வுகள் மற்றும் விவசாயிகள் மற்றும் அதிகாரிகளுக்கு பயிற்சி வழங்குதல் பூச்சிக்கொல்லி பயன்பாடு ஆகிய விடயங்கள் ஒப்பந்தத்தில் காணப்படுவதாகவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (அ)

# பஸில் அமைத்ததாகக் கூறப்படும் வீட்டை அரசுடமையாக்க முடிவு!

கொழும்பு, பெப். 23

கம்பஹா, மல்வானையில் உரிமையாளர் ஒருவர் அல்லாத சொகுசு ரக வீட்டை அரசாங்க செயற்பாடுகளுக்காக பயன்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக நீதியமைச்சர் விஜேதாச ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

முன்னாள் நிதியமைச்சர் பஸில் ராஜபக்ஷவினால் மல்வானையில் 16 ஏக்கர் நிலப்பரப்பில், நிர்மாணிக்கப்பட்டதாக கூறப்படும் நீச்சல் தடாகத்துடனான சொகுசு வீடு தொடர்பாக, கடந்த நல்லாட்சி அரசாங்க காலத்தில் பல்வேறு விமர்சனங்கள் முன்வைக்கப்பட்டன.

குறித்த வீட்டை நிர்மாணிக்க அரசாங்கத்தின் நிதி முறைக்கேடாக பயன்படுத்தப்பட்டதாக குற்றஞ்சாட்டப்பட்டிருந்தது.

அதங்கிணங்க, முன்னாள் அமைச்சர் பஸிலின் உறவினரான நடேசனால் குறித்த நிலம் கொள்வனவு செய்யப்பட்டதாக குற்றம் சுமத்தப்பட்டு, இந்த விடயம் தொடர்பாக நீதிமன்றில் வழக்கும் தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

வழக்கு விசாரணையின் போது, கம்பஹா மேல் நீதிமன்றில் வாக்குமூலம் அளித்த குறித்த வீட்டை நிர்மாணிப்பதற்கு உதவிய கட்டிடகலை நிபுணர், முன்னாள் அமைச்சர் பஸிலினால் வழங்கப்பட்ட பணத்தினால், ஒப்பந்தகாரர் ஊடாக வீடு கட்டப்பட்டதாக தெரிவித்தார்.

மேலும், குறித்த வீட்டின் ஆரம்ப பணிகளுக்காக பசில் ராஜபக்ஷவின் மனைவி வருகை தந்திருந்ததாகவும் அவர் தெரிவித்திருந்தார்.

எவ்வாறாயினும், பஸில் ராஜபக்ஷ நீதிமன்றில் சாட்சியமளிக்கையில், மல்வானை பகுதியில் தாம் சொகுசு வீட்டை நிர்மாணிக்கவில்லை என குறிப்பிட்டிருந்தார்.

இவ்வாறு முன்னெடுக்கப்பட்ட விசாரணைகளின் அடிப்படையில், குறித்த வீட்டின் உரிமையாளரைக் கண்டறிய முடியாத நிலையில் இதனை அரசுடமையாக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

குறித்த சொகுசு வீட்டை நீதியமைச்சுக்கு கீழ் கொண்டு வருவதாகவும், அதனை எதிர்காலத்தில் நீதியமைச்சின் நடவடிக்கைகளுக்காக பயன்படுத்துமாறு கம்பஹா மேல் நீதிமன்றம் உத்தரவிட்டிருந்தது.

இந்த நிலையில், குறித்த வீடு அமைந்துள்ள பகுதிக்கு நேற்று முன் தினம் களவிஜயம் மேற்கொண்டுள்ள நீதி அமைச்சர் விஜயதாஸ, குறித்த பகுதிக்கு பொருத்தமான வகையில், குறித்த கட்டடத்தை எவ்வாறு பயன்படுத்தலாம் என விரைவில் தீர்மானித்து அதற்கான நடவடிக்கை எடுக்கப்படும் என குறிப்பிட்டார்.

இந்த வீடானது, 2022 ஆம் ஆண்டு இடம்பெற்ற மே வன் முறையின்போது தீக்கிரையாக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# பொறாமை வேண்டாம் இணைந்து பயணிப்போம்!

## மனோவுக்கு இதொகா அழைப்பு

கொழும்பு, பெப். 23

“ இந்திய அரசின் நிதி உதவியோடு மலையகத்தில் அமைக்கப்பட இருக்கின்ற வீட்டுத்திட்டம் அமைச்சர் ஜீவன் தொண்டமான தலைமையில் ஆரம்பிக்கப்பட்டுள்ளதால் பாராளுமன்ற உறுப்பினர் மனோ கணேசனுக்கு மன உளைச்சல் ஏற்பட்டுள்ளது.” - என்று முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரும் இலங்கை தொழிலாளர் காங்கிரசின் பிரதித் தலைவருமான கணபதி கனகராஜ் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு,

இந்திய அரசாங்கம், மலையகப்பகுதியில் பல்வேறு வகையான அபிவிருத்தி வேலை திட்டங்களை மேற்கொண்டு வருகிறது. மலையக மக்களின் வாழ்வாதார கல்வி, குடியிருப்பு, பொருளாதார மேம்பாட்டு வேலை திட்டங்கள் என்பனவும் இவற்றில் உள்ளடங்கும். ஆனால் இத்திட்டங்களை பயன்படுத்தி அவற்றை அரசியலாகி லாபம் தேடி - சுவை கண்டவர்களுக்கு தமது அரசியல் எதிர்காலம் குறித்து கிலி கொள்ளச் செய்துள்ளது. இதனாலேயே பாராளுமன்ற உறுப்பினர் மனோ கணேசன் தடுமாற்றத்துக்கு உள்ளாகி உள்ளார்.

நல்லாட்சி காலத்துக்கு முன்பே மலையக மக்களுக்கு வீடமைத்துக் கொடுக்கப்பட வேண்டும் என்ற கொள்கை ரீதியான முடிவை இந்திய மத்திய அரசு எடுத்திருந்தது. அதற்கான பூர்வாங்க வேலைகளை இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் செய்திருந்தது. அதன் அடிப்படையிலேயே நாலாயிரம் வீடுகளை முதற்கட்டமாக வழங்குவதற்கு இந்திய அரசு முடிவெடுத்து அதை அமுல்படுத்தியது.

அதன் தொடர்ச்சியாகவே பத்தாயிரம் வீட்டு திட்டத்தை இந்திய பிரதமர் நரேந்திர மோடி, மலையக விஜயத்தின்போது அறிவித்தார். இந்திய பிரதமர் நரேந்திர மோடி மலையகத்துக்கான பத்தாயிரம் வீட்டு திட்டத்தை அறிவித்தபோது மலையக மக்களின் குடியிருப்பு தேவை கருதி இந்திய அரசால் நன்கொடையாக வீட்டுத் திட்டம் வழங்கப்படுகின்றது என்று கூறினாரே தவிர எந்த ஒரு அரசியல் கட்சியின் கோரிக்கையை ஏற்றும் வழங்குவதாக தெரிவிக்கவில்லை.

எனினும் இந்திய வீடமைப்புத் திட்டத்தின் பிதாமகனாக மனோ கணேசன் தன்னை காட்டிக்கொள்ள முற்படுகின்றார். வெளிநாட்டு நன்கொடைகள் கிடைக்கின்ற போது நாட்டில் நடைமுறையில் இருக்கின்ற அரசாங்க அமைச்சர்கள் அதை அமுல் படுத்துவார்கள். இது தான் பொதுவான நடைமுறையாகும். இதில் மக்களுக்கு நன்மைகள் சென்றடைய வேண்டும் என்பதே பிரதானமாகும்.

பாராளுமன்ற உறுப்பினர் மனோ கணேசன் இதை புரிந்து கொண்டு செயல்பட வேண்டும். இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் எதிணியிலுள்ள அரசியல்வாதிகளை விமர்சனம் செய்து அரசியல் செய்வதை தவிர்த்துக் கொள்ள வேண்டும் என்ற கோட்பாட்டை கடைபிடித்து வருகிறது. நாம் அமைதியாக இருக்கின்றோம் என்பதற்காக எமது நடவடிக்கைகளை கொச்சைப்படுத்தி அரசியல் செய்வதற்கு முற்பட்டால் எமக்கும் தகுந்த பதிலடி கொடுக்க வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படும்.

இந்த நாட்டில் வாழுகின்ற சிறுபான்மை இந்திய வம்சாவளி மக்கள் ஒற்றுமையாக இருந்து தமது அரசியல் அபிலாசைகளை நிறைவேற்றிக் கொள்வதற்காக அரசியல் காழ்ப்புணர்ச்சிக்கு அப்பால் ஒன்றிணைந்து செயல்படுமாறு மனோ கணேசனுக்கு அழைப்பு விடுகிறோம்-என்றார். (அ)

# வவுனியா மாவட்டத்தில் கடந்த 5 ஆண்டுகளில் 67 யானைகள் பலி

வவுனியா, பெப். 23

வவுனியா மாவட்டத்தில் 2019ஆம் ஆண்டு தொடக்கம் 2024 வரை 67 யானைகள் பலியாகியுள்ளதாக வனஜீவராசிகள் பாதுகாப்பு திணைக்களம் தெரிவித்துள்ளது.

குறிப்பாக செட்டிகுளம், நெடுங்கேணி, வவுனியா உட்பட வனத்தினை அன்மித்த பகுதிகளிலில் அனுமதியற்ற சட்டவிரோத மின்சார வேலியில் சிக்கியும், வெங்காய வெடி, துப்பாக்கி சூட்டுக்கு இலக்காகியும் (சட்டவிரோத துப்பாக்கி) புகையிரத விபத்துக்களாலும் இவை பலியாகியுள்ளன.

மேலும் 05 வயது தொடக்கம் 40 வயதுடைய யானைகளே இவ்வாறு பலியாகியுள்ளன.

இதேவேளை இவ்வருடம் இதுவரை 03 யானைகள் பலியானதுடன், கடந்த வருடம் 17 யானைகள் வரை பலியாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

(அ)

# டுபாயில் 13 இலங்கையர் கைது!

கொழும்பு, பெப். 23

டுபாயில் இலங்கையர்கள் 13 பேர் கைது செய்யப்பட்டுள்ளதாக அந்நாட்டு ஊடகங்கள் தெரிவித்துள்ளன.

பொலிஸாரால் தேடப்பட்டு வந்த 13 முக்கிய குற்றவாளிகளே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் இவ்வாறு கைது செய்யப்பட்டவர்களில் பெலியத்தவில் ஐந்து பேர் படுகொலை செய்யப்பட்ட சம்பவத்துடன் தொடர்புடையவர் எனக் கூறப்படும் உரகஹா மைக்கல் என்பவரும் அடங்குகின்றமை குறிப்பிடத்தக்கது. (அ)

ஈழநாடு



# தொழிற்பயிற்சி நிறுவனங்கள் பல்கலை கட்டமைப்பின் கீழ்!

## ஜனாதிபதி ரணில் தெரிவிப்பு

கொழும்பு, பெப். 23

**நவீன உலகிற்கு ஏற்றவாறு தொழில் கல்வியை மறுசீர மைத்து, இந்நாட்டின் இளைஞர் யுவதிகள் போட்டித் தன்மை நிறைந்த உலக தொழில் சந்தையில் வெற்றி பெறுவதற்கு உகந்த சூழல் உருவாக்கப்படும் என ஜனா திபதி ரணில் விக்கிரமசிங்க உறுதியளித்தார்.**

அதற்கமைய, நாட்டின் அனைத்து தொழிற்பயிற்சி நிறுவனங்களையும் ஒருங்கி ணைத்து ஒரே பல்கலைக்கழக கட்டமைப்பின் கீழ் கொண்டு வருவதோடு, புதிய விடயப்ப ரப்புகளை உள்ளடக்கிய பாட நெறிகளை அறிமுகப்படுத்த திட்டமிட்டிருப்பதாகவும் ஜனா திபதி தெரிவித்தார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரம சிங்க இரத்மலானை லலித் அத் துலத்முதலி தொழிற்பயிற்சி நிலையத்திற்கு நேற்று காலை மேற்பார்வை விஜயமொன்றை மேற்கொண்டிருந்த போதே இதனை கூறினார்.

தற்போது டிஜிற்றல் மாற்றத் திற்கான முன்னெடுப்புகள் துரி தமாக இடம்பெற்று வருவதோடு, இதன்போது செயற்கை நுண் ணறிவு உள்ளிட்ட துறைகள்



குறித்து விசேட கவனம் செலுத் தப்படும் எனவும், நாளாந்தம் மாற்றமடையும் தொழில்நுட் பத்துடன் முன்னேறிச் செல்ல வேண்டும் என்பதே இலங்கை யின் எதிர்பார்ப்பு எனவும் ஜனா திபதி தெரிவித்தார். (அ)

# பொலிஸ் மா அதிபர் பதவிக்கு தென்னக்கோனை நியமிக்கலாம்!

## கூறுகிறார் அமைச்சர் டிரான் அலஸ்

கொழும்பு, பெப். 23

பொலிஸ் மா அதிபர் பத விக்கு தற்போதைய பதில் பொலிஸ் மா அதிபர் தேசபந்து தென்னக்கோனை நியமிப்பதே தமது விருப்பம் என பொது பாதுகாப்பு அமைச்சர் டிரான் அலஸ் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி ஊடக மையத் தில் இடம்பெற்ற ஊடகவிய லாளர் சந்திப்பில் கலந்து கொண்ட அமைச்சர் இதனைத் தெரிவித்தார்.

எதிர்வரும் 26ஆம் திகதியு டன் முடிவடையவுள்ள பதில் பொலிஸ் மா அதிபரின் பதவிக் காலம் மற்றும் நிரந்தர பொலிஸ் மா அதிபர் நியமனம் தொடர் பில் ஊடகவியலாளர்கள் எழுப் பிய கேள்விக்கு பதிலளிக்கும் போதே அமைச்சர் மேற்கண்ட வாறு கூறியுள்ளார்.



பொலிஸ் மா அதிபர் பத விக்கு தேசபந்து தென்னக்கோன் நியமிக்கப்படுவதை நான் விரும்புகிறேன் என்றும் அதில் பிரச்சனை இல்லை. அரச தரப் பில் இருந்து எந்த பிரச்னையும் இல்லை எனவும் அவர் தெரி வித்தார்.

ஆனால் அரசியல் நிர்ணய சபை வித்தியாசமாக வேலை செய்கிறார்கள் என்றும் மக்கள் அனைவரும் அனுமதித்தால் தேசபந்து தென்னக்கோன் பொலிஸ் மா அதிபராக நியமிக் கப்பட வேண்டும் என்றும் அவர் குறிப்பிட்டார். (அ)



# உணவு விவசாய அமைப்பின் பணிப்பாளர் மீன்பிடி அமைச்சர் டக்ளஸுடன் சந்திப்பு

கொழும்பு, பெப். 23

கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவுக்கும் ஐக்கிய நாடுகள் உலக உணவு மற்றும் விவசாய அமைப்பின் பிரதி பணிப்பாளர் நாயகம் மனுவேல் பராங்கே தலைமை யிலான பிரதிநிதிகளுக்கும் இடையிலான சந்திப்பொன்று கடற்றொழில் அமைச்சில் நேற்று இடம்பெற்றுள்ளது.

இலங்கை கடற்றொழில் சமூகத்தை சர்வதேச மட்டத் தில் உயர்த்துவதற்காக ஐக்கிய நாடுகள் உலக உணவு மற்றும் விவசாய அமைப்பின் உதவியு டன் உருவாக்கப்பட்டு வரும் புதிய கடற்றொழில் சட்டமூ லம் ஒரு மாதத்திற்குள் அமைச்ச ரவையின் அனுமதியுடன் நாடா ளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படு மென அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

கடற்றொழிலாளர்கள் மற் றும் துறைசார் நிபுணர்களின் கருத்துக்களை உள்வாங்கி இந்த சட்டமூலம் தயாரிக்கப்படுவதா கவும் அவர் சுட்டிக்காட்டியுள் ளார். (அ)

# 400 ரயில் கடவைகளுக்கு பாதுகாப்பு வேலிகள்!

கொழும்பு, பெப். 23

400 ரயில் கடவைகளில் பாதுகாப்பு வேலிகளை அமைக்க ரயில்வே திணைக்களம் தீர்மா னித்துள்ளது.

இதற்காக 1200 பணியாளர் கள் இணைத்துக் கொள்ளப்ப டவுள்ளதாக ரயில்வே பொதுமு காமையாளர் பண்டார தெரி வித்துள்ளார்.

அரசின் பல்நோக்கு திட்டத் தின் கீழ் பணியில் அமர்த்தப் பட்டவர்களை இந்த கடமைக ளில் ஈடுபடுத்த திட்டமிடப்பட் டுள்ளதாக அவர் கூறினார்.

நிதி அமைச்சுடன் இடம் பெற்ற கலந்துரையாடலில் இந்த ஆட்சேர்ப்பிற்கு இணக்கம் காணப்பட்டதாக ரயில்வே பொது முகாமையாளர் தெரி வித்துள்ளார்.

பாதுகாப்பு வேலிகள் இல் லாத அதிகளவான ரயில் கட வைகள், புத்தளம் மற்றும் கரை யோர மார்க்கத்தில் காணப்படு கின்றன.

இவற்றில் சில கடவைகளுக்கு பொலிஸாரினால் பாதுகாப்பு வேலிகள் பொருத்தப்பட்டிருந்த போதிலும், அண்மையில் புத்த ளம் - ஆராச்சிக்கட்டுவ, மையாவ ரயில் கடவையில் இடம்பெற்ற விபத்தின் பின்னர், அந்த வேலிகள் அகற்றப்படும் என பொலிஸார் தெரிவித்ததாக ரயில்வே பொது முகாமையா ளர் பண்டார மேலும் கூறியுள் ளார். (அ)

# கோப், கோபா தலைவர் பதவிகளை எதிர்க்கட்சியினருக்கு வழங்குங்கள்!

கொழும்பு, பெப். 23

கோப் மற்றும் கோபா குழுக் களின் தலைவர் பதவிகளை எதிர்க்கட்சியைச் சேர்ந்தவர்க ளுக்கு வழங்குமாறு எதிர்க்கட் சியின் பிரதம அமைப்பாளரும், நாடாளுமன்ற உறுப்பினருமான லக்ஷ்மன் கிரியெல்ல, பிரதிச் சபாநாயகர் அஜித் ராஜபக்ஷ விடம் கோரிக்கை விடுத்துள் ளார்.

நேற்று பாராளுமன்ற அமர் வில் கலந்து கொண்டு உரையாற் றும் போதே அவர் இதனை தெரிவித்தார்.

இதேவேளை, காலிமுகத்தி டல் போராட்டத்தின் போது சபாநாயகர் எதிர்க்கட்சிகளுக்கு இந்த பதவிகளை வழங்குவதாக எழுத்து மூலம் உறுதியளித்ததா கவும், இது தொடர்பாக சபாநா யகர் மஹிந்த யாப்பா அபேவர் தனவின் கவனத்திற்கு கொண்டு செல்லவுள்ளதாக பிரதி சபாநா யகர் மேலும் குறிப்பிட்டுள் ளார். (அ)

# தேர்தலை எப்படி நிறுத்தலாம் என்று யோசிக்கின்றது அரசு!

## டலஸ் பகிரங்கக் குற்றச்சாட்டு

கொழும்பு, பெப். 23

ரணில் அரசுக்குத் தேர்தலை நடத்துவதற்கு விருப்பம் இல்லை. இந்த அரசு தேர்தல் அச்சத்தில் உள்ளது. எப்படித் தேர்தலை நிறுத்தலாம் என்று ரணில் அரசு யோசிக்கின்றது என சுதந்திர மக்கள் சபையின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான டலஸ் அழகப்பெரும தெரிவித் துள்ளார்.

தென்னிலங்கை ஊடகம் ஒன்றுக்கு வழங்கிய செவ்வியின் போதே அவர் மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கை யில்-

எந்தத் தேர்தலையும் நடத்து வதற்கு ஐக்கிய தேசியக் கட்சி யின் தலைவர் ரணில் விக்கிரம சிங்க தலைமையிலான அரசுக்கு விருப்பம் இல்லை.

இந்த அரசு தேர்தல் அச்சத் தில் உள்ளது. வரலாற்றில் முதல் தடவையாக இரண்டு தேர்தல் களை ஒத்திப்போட்டுள்ளது. வரலாற்றில் பாராளுமன்றத் தேர்தலை 6 வருடங்களுக்கு ஒத்திப்போட்டது இந்த ஐக்கிய தேசிய கட்சி.

தேர்தல் நடத்தப்பட வேண் டுமா, இல்லையா என்று சர்வ ஜன வாக்கெடுப்பை நடத்தியது. வாக்குச் சாவடிகளுக்குள் புகுந்து கள்ள வாக்குகளைப் போட்டுத் தங்களுக்குத் தேவை யான முடிவைப் பெற்றுக்கொண் டது ஐக்கிய தேசியக் கட்சி அரசு.

அதனூடாக நாடாளு மன்றத் தேர்தலை 6 வருடங்க ளுக்கு ஒத்திப்போட்டது. அப்ப டிப்பட்ட ஐக்கிய தேசியக் கட்சி யின் தலைவர் இப்போது ஜனா திபதியாகி இரண்டு தேர்தல் களை (உள்ளூராட்சி சபைத் தேர்தல், மாகாண சபைத் தேர் தல்) ஒத்திப்போட்டுள்ளார்.

இதனால், ரணில் விருப்பத் தோடு தேர்தலை நடத்துவார் என்று சொல்ல முடியாது. இருந் தாலும், அவர் தேர்தலை நடத்தும் வரை நாம் காத்திருக் கத் தேவையில்லை.

ஜனாதிபதியின் பதவிக் காலம் முடிவதற்கு ஒரு மாதம் இருக்கும்போது ஜனாதிபதித் தேர்தலை நடத்த வேண்டும் என்று அரசமைப்பு சொல்கின்

# ஆரம்பப் பிரிவு மாணவர்களுக்கு இலவச உணவு வழங்க நடவடிக்கை

கொழும்பு, பெப். 23

ஆரம்பப்பிரிவில் கல்வி கற் கும் அனைத்து மாணவர்களுக் கும் அடுத்த மாதம் முதல் இல வச உணவு வழங்க நடவடிக்கை எடுக்கப்படும் என கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது.

அதற்கமைய, தரம் 1 முதல் 5 வரை கல்வி பயிலும் 17 இலட் சம் மாணவர்களுக்கு இலவச உணவு வழங்கப்படவுள்ளது.

காலை 7.30 மணிக்கு ஆரம் பப்பிரிவு மாணவர்களுக்கு உணவு வழங்க திட்டமிடப்பட் டுள்ளதாக கல்வி அமைச்சு தெரி வித்துள்ளது.

ஊட்டச்சத்து குறைபாட் டால் பாதிக்கப்படும் சிறுவர் கள் தொடர்பில் சுகாதாரத்துறை வெளிக்கொணர்ந்த விடயங் களை கருத்திற்கொண்டு இந்த திட்டம் செயற்படுத்தப்பட வுள்ளது.

இதற்காக 16.6 பில்லியன் ரூபா நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

கல்வி அமைச்சினால் அங்கீ கரிக்கப்பட்ட செயன்முறையின் அடிப்படையில், பொது சுகா தார பரிசோதகர்களின் மேற் பார்வையில் உணவு தயாரிக்கப் படும் என கல்வி அமைச்சு தெரி வித்துள்ளது. (அ)

ஈழநாடு



# தேர்தலை எப்படி நிறுத்தலாம் என்று யோசிக்கின்றது அரசு!

## டலஸ் பகிரங்கக் குற்றச்சாட்டு



**கொழும்பு, பெப். 23**

**ரணில் அரசுக்குத் தேர்தலை நடத்துவதற்கு விருப்பம் இல்லை. இந்த அரசு தேர்தல் அச்சத்தில் உள்ளது. எப்படித் தேர்தலை நிறுத்தலாம் என்று ரணில் அரசு யோசிக்கின்றது என சுதந்திர மக்கள் சபையின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான டலஸ் அழகப்பெரும தெரிவித்துள்ளார்.**

தென்னிலங்கை ஊடகம் ஒன்றுக்கு வழங்கிய செவ்வியின் போதே அவர் மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

எந்தத் தேர்தலையும் நடத்துவதற்கு ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்ரமசிங்க தலைமையிலான அரசுக்கு விருப்பம் இல்லை.

இந்த அரசு தேர்தல் அச்சத்தில் உள்ளது. வரலாற்றில் முதல் தடவையாக இரண்டு தேர்தல்களை ஒத்திப்போட்டுள்ளது. வரலாற்றில் பாராளுமன்றத் தேர்தலை 6 வருடங்களுக்கு ஒத்திப்போட்டது இந்த ஐக்கிய தேசிய கட்சி.

தேர்தல் நடத்தப்பட வேண்டுமா, இல்லையா என்று சர்வஜன வாக்கெடுப்பை நடத்தியது. வாக்குச் சாவடிகளுக்குள் புகுந்து கள்ள வாக்குகளைப் போட்டுத் தங்களுக்குத் தேவையான முடிவைப் பெற்றுக்கொண்டது ஐக்கிய தேசியக் கட்சி அரசு.

அதனூடாக நாடாளு மன்றத் தேர்தலை 6 வருடங்க ளுக்கு ஒத்திப்போட்டது. அப்படிப்பட்ட ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் இப்போது ஜனாதிபதியாகி இரண்டு தேர்தல்களை (உள்ளூராட்சி சபைத் தேர்தல், மாகாண சபைத் தேர்தல்) ஒத்திப்போட்டுள்ளார்.

இதனால், ரணில் விருப்பத்தோடு தேர்தலை நடத்துவார் என்று சொல்ல முடியாது. இருந்தாலும், அவர் தேர்தலை நடத்தும் வரை நாம் காத்திருக்கத் தேவையில்லை.

ஜனாதிபதியின் பதவிக் காலம் முடிவதற்கு ஒரு மாதம் இருக்கும்போது ஜனாதிபதித் தேர்தலை நடத்த வேண்டும் என்று அரசமைப்பு சொல்கின்

# சுற்றுலாத்துறைக்கு வாகனங்கள் இறக்குமதி செய்ய நடவடிக்கை!

*கொழும்பு, பெப். 23*

சுற்றுலாத்துறைக்கு தேவையான வாகனங்களை இறக்குமதி செய்வதற்கான யோசனை அமைச்சரவையில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளதாக சுற்றுலாத் துறை அமைச்சர் ஹரின் பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

அதன்படி 1000 வான்கள் மற்றும் கார்கள் இறக்குமதி செய்ய நடவடிக்கை எடுத்து வருவதாகவும், குறித்த பிரேர



ணைக்கு அடுத்த அமைச்சரவை கூட்டத்தில் அனுமதி கிடைக்கப் பெறும் என எதிர்பார்ப்பதாகவும் சுற்றுலாத் துறை அமைச்சர் ஹரின் பெர்ணான்டோ தெரிவித்துள்ளார். (அ)

# இளம் வயதினரிடையே வாய் புற்றுநோய் தாக்கம்

*கொழும்பு, பெப். 23*

இளம் வயதினரிடையே வாய் புற்றுநோயின் தாக்கம் அதிகரித்துள்ளதாக சத்திரசிகிச்சை வைத்தியர் தனுஜா தக்ஷிலி பத்திராஜா தெரிவித்துள்ளார்.

சுகாதார மேம்பாட்டுப் பணியகத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவித்த போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில் " கடந்த காலங்களில் நாட்டில் வாய் புற்றுநோயின் தாக்கம் அதிகரித்துள்ளது. குறிப்பாக இளம் வயதினரிடையே வாய் புற்றுநோயின் தாக்கம் வெகுவாக அதிகரித்துள்ளது. இதேவேளை பெண்களுக்கு கர்ப்பப்பையில் ஏற்படும் வாய்ப் புற்றுநோயின் தாக்கம் ஓரளவு குறைந்துள்ளது -என்றார்.

(அ)

# பஸ்ஸின் மிதி பலகையில் பயணித்த நபரொருவர் தவறி வீழ்ந்து மரணம்

*கொழும்பு, பெப். 23*

பஸ் ஒன்றின் மிதி பலகையில் பயணித்துக்கொண்டிருந்த நபரொருவர் தவறி வீழ்ந்ததில் உயிரிழந்துள்ளார்.

இந்த சம்பவம் அம்பாந்தோட்டையில் கொழும்பு - வெள்ளவாய பிரதான வீதியில் இடம்பெற்றுள்ளது.

இவ்வாறு உயிரிழந்தவர் அம்பந்தோட்டை பிரதேசத்தைச் சேர்ந்த 43 வயதுடைய நபராவார்.

இவர் பஸ்ஸின் மிதி பலகையில் நின்று பயணித்துக்கொண்டிருந்த போது பஸ் நடத்துநரிடம் பயணச்சீட்டை பெற்று மிகுதி பணத்தை தனது பணப்பையில் வைக்க முற்பட்ட போது தவறி வீழ்ந்து காயமடைந்துள்ளார்.

இதனையடுத்து இவர், பஸ் சாரதி மற்றும் நடத்துநர் ஆகியோரின் உதவியுடன் அம்பந்தோட்டை தேசிய வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார். (அ)

# சென்னையில் இருந்து யாழ். திரும்பியவர் கைது

*யாழ்ப்பாணம், பெப். 23*

யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற வன்முறைச் சம்பவங்களுடன் தொடர்புடைய குற்றச்சாட்டில் தேடப்பட்டு வந்த நபரொருவர் தமிழகத்தில் தலைமறைவாகியிருந்து மீண்டும் யாழ்ப்பாணம் திரும்பிய வேளை கைது செய்யப்பட்டுள்ளார்.

சந்தேக நபர் சென்னையில் இருந்து யாழ்ப்பாணம் சர்வதேச விமான நிலையத்தின் ஊடாக யாழ்ப்பாணம் திரும்புவதாக பொலிஸாருக்கு கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலின் அடிப்படையிலேயே விமான நிலைய வளாகத்தில் காத்திருந்த பொலிஸார் சந்தேக நபரை கைது செய்துள்ளனர்.

யாழ்ப்பாணம் மற்றும் கோப்பாய் பகுதிகளில் இடம்பெற்ற வன்முறைச் சம்பவங்களுடன் தொடர்புடைய இந்த சந்தேக நபர், நீண்ட காலமாக பொலிஸாரால் தேடப்பட்டு வந்த நிலையிலேயே கைதாகியுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

சந்தேக நபரை பொலிஸ் காவலில் தடுத்து வைத்து பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

(அ)

# கறுப்பு ஜீலைக்கு காரணமானவர்கள் ஐக்கிய தேசியக் கட்சித் தலைமைகளே

*கொழும்பு, பெப். 23*

83 கறுப்பு ஜூலைக் குற்றச் செயல்கள் ஜே.ஆர்.ஜெயவர்தன, ஆர்.பிரேமதாச, ரணில் விக்ரமசிங்க ஆகியோரின் தலைமையின் கீழ் இயங்கிய ஐக்கிய தேசிய கட்சி அரசாங்கத்தின் தலைமைத்துவத்தின் இடையீட்டின் பேரில்தான் மேற்கொள்ளப்பட்டன என தேசிய மக்கள் சக்தியின் தேசிய நிறைவேற்றுப் பேரவை உறுப்பினர் பிமல் ரத்நாயக்க தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

இந்த நாட்டில் தேசிய மக்கள் சக்தி மற்றும் மக்கள் விடுதலை முன்னணிக்கு மக்கள் மத்தியில் வரவேற்பு அதிகரித்து வருவதை நாங்கள் அவதானிக்கின்றோம்.

எனவே, எமக்கு எதிரான பாசறையினர் எம்மீது ஆதாரமற்ற, அடிப்படையற்ற பொய்யான குற்றச்சாட்டுக்களை முன்வைத்து வருகின்றனர்.

குறிப்பாக அநுர குமார திசாநாயக்கவை உள்ளிட்டவர்கள் இந்தியாவின் அழைப்பின் பேரில் இந்திய விஜயத்தை மேற்கொண்டு வந்ததன் பின்னர் இந்நாட்டு தமிழ் மக்கள் மத்தியில் எம்மீதான மிகப் பெரிய ஆர்வமும் கவனமும் அதிகரித்து வருகின்றது.

எனவே, தமிழ் மக்கள் எம்மோடு இணைவதைத் தடுப்பதற்காக ஐக்கிய தேசியக் கட்சியுடன் தொடர்புள்ள பல்வேறு குழுக்கள் மிகவும் தவறான ஒரு செய்தியை புனைந்து வருகின்றன.

மக்கள் விடுதலை முன்னணியின் இடையீட்டுடன்தான் 83 ஆம் ஆண்டு கறுப்பு ஜூலை கலவரம் மேற்கொள்ளப்பட்டதென பொய்யான பிரச்சாரத்தை இவர்கள் தமிழ் மக்கள் மத்தியில் செய்து வருகின்றனர். இது அப்பட்டமான பொய்யாகும்.

83 கறுப்பு ஜூலைக் குற்றச் செயல்கள் ஜே.ஆர். ஜெயவர்தன, ஆர்.பிரேமதாச, ரணில் விக்ரமசிங்க ஆகியோரின் தலைமையின் கீழ் இயங்கிய ஐக்கிய தேசிய கட்சி அரசாங் கத்தின் தலைமைத்துவத்தின் இடையீட்டின் பேரில்தான் மேற்கொள்ளப்பட்டன.

அதுபற்றிய எழுத்திலான குறிப்புகள் எங்களிடம் இருக்கின்றன. அவற்றை எங்களால் சமர்ப்பிக்க முடியும். 83 கறுப்பு ஜூலை கலவரத்துக்கு முன்னர் யாழ். நூலகத்தை தீக்கிரையாக்குவதற்காக ஐக்கிய தேசியக் கட்சியின் அமைச்சரவை அந்தஸ்த்துடைய அமைச்சர்கள் யாழ்ப்பாணத்திற்குச் சென்றார்கள். அவர்கள் பற்றிய எல்லா விடயங்களையும் எங்களால் சமர்ப்பிக்க முடியும்.

ஆனால், இந்த கலவரத்தின் பின்புலத்தை நாம் ஆராய்ந்தால் 1983 கறுப்பு ஜூலை என்பது குறிப்பாக இலங்கையில் வடக்கு மாகாணங்களை தவிர்ந்த ஏனைய எல்லா மாகாணங்களிலும் வசித்த தமிழ் மக்களுக்கு எதிராக ஐக்கிய தேசியக் கட்சி திட்டமிட்ட அடிப்படையில் கட்டவிழ்த்துவிட்ட கடுமையான ஒரு இனவாத செயற்பாடாகும்-என்றார்.

(அ)

# யாழ். இந்திய துணைத் தூதரகத்தின் புதிய துணைத் தூதராக சாய் முரளி!

*யாழ்ப்பாணம், பெப். 23*

யாழ். இந்தியத் துணைத் தூதரகத்தின் புதிய துணைத் தூதராக சாய் முரளி அடுத்த வாரம் பதவியேற்கவுள்ளார்.

யாழில் உள்ள இந்திய தூதரகத்தின் துணைத் தூதுவர் ராகேஷ் நட்ராஜின் பதவிக்காலம் எதிர்வரும் 25ஆம் திகதியுடன் நிறைவுறும் நிலையில், அவர் டில்லிக்கு மாற்றலாகிச் செல்கிறார்.

இதனால் யாழில் உள்ள இந்திய துணைத் தூதரகத்தில் காணப்படும் வெற்றிடத்துக்கே சாய் முரளி நியமிக்கப்பட்டுள்ளார்.

சாய் முரளி 1991ஆம் ஆண்டு பிறந்தவர்.

இவர் 2019ஆம் ஆண்டு வெளிவிவகார அமைச்சில் இணைந்து தற்போது வரை ரஷ்யாவின் மாநிலமொன்றில் இந்திய தூதரகத்தின் கொன்ஸிலர் ஜெனரலாக பணியாற்றி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (அ)

# பூசா சிறைச்சாலையின் கைதிகளின் கூண்டில் இருந்து கைபேசிகள் மீட்பு

*கொழும்பு, பெப். 23*

பூசா சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள இரு கைதிகளின் கூண்டுக்குள் இருந்து கையடக்கத் தொலைபேசிகள் மற்றும் இலத்திரனியல் உபகரணங்கள் கைப்பற்றப்பட்டுள்ளன.

உயிரிழந்த பிரபல போதைப் பொருள் கடத்தல்காரரான “கொஸ்கொடை தாரக ” வின் சகோதரன் மற்றும் போதைப் பொருள் கடத்தல்காரரான “ ருவுல் குமார ” ஆகியோரின் சிறைக் கைதிகளின் கூண்டில் இருந்தே இந்த பொருட்கள் கைப்பற்றப்பட்டுள்ளன.

பூசா சிறைச்சாலை அதிகாரிகளால் மேற்கொள்ளப்பட்ட விசேட சோதனை நடவடிக்கையின் போதே இவை கைப்பற்றப்பட்டுள்ளன. (அ)

# நாடு முன்னேற்றப் பாதையில் செல்ல அரச ஊழியர்களும் உழைக்கவேண்டும்

## கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் டாக்டர் சகீலா இஸ்ஸடீன்



அம்பாறை, பெப். 23

**பொருளாதார நெருக்கடி மிக்க இக்கட்டான சூழ்நிலையில் அரச ஊழியர்களும் நாட்டின் முன்னேற்றத்திற்காக உழைக்க வேண்டும் என கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி திருமதி சகீலா இஸ்ஸடீன் தெரிவித்தார்.**

பலநோக்கு அபிவிருத்தி செயலணி திட்டத்தின் கீழ் இணைக்கப்பட்டு கல்முனை பிராந்திய சுகாதார நிறுவனங்களில் பணியாற்றுகின்ற ஊழியர்களுக்கான பயிற்சிக் கருத்தரங்கு கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனை கேட்போர்கூடத்தில் இடம்பெற்றது.

கிழக்கு மாகாண முகாமைத்துவ அபிவிருத்திப் பயிற்சிப் பிரிவினால் ஏற்பாடு செய்யப்பட்ட குறித்த பயிற்சிக் கருத்தரங்கு பணிப்பாளர் என்.எம். நௌபீஸ் தலைமையில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

சுகாதார சேவையினைப் பொறுத்தவரையில் சுகாதார ஊழியர்களின் பணி மிகப் பிரதானமானது. கடந்த காலங்களில் நீங்கள் வெவ்வேறு பணிகளில் ஈடுபட்டிருந்தாலும் ஏதோ ஒரு அடிப்படையில் சுகாதார சேவையில் இணைக்கப்பட்டுள்ளீர்கள். இது மிகவும் பெறுமதியான தொழிலாகும்.

பொருளாதார நெருக்கடி மிக்க சூழ்நிலையில்தான் அரசாங்கம் இவ்வாறானதொரு நியமனத்தினை வழங்கியது என்பதனை இங்குள்ள சகலரும் நினைவில்கொள்ள வேண்டும். அந்த வகையில் சுகாதார சேவைக்குள் உள்ளீர்க்கப்பட்ட நாம் பொறுப்புடன் செயற்பட்டு நாட்டின் முன்னேற்றத்திற்காக உழைக்க வேண்டும்.

சுகாதாரத்துறையானது ஒரு சேவை என்பதனை சகலரும் புரிந்துகொள்ள வேண்டும். குறிப்பாக சுகாதார நிறுவனங்களில் பணியாற்றுகின்றவர்கள் கடமைக்கு மேலதிகமாகவும் சேவையாற்றுகின்றனர். எனவே பலநோக்கு அபிவிருத்தி செயலணி திட்டத்தின் கீழ் இணைக்கப்பட்டு சுகாதார நிறுவனங்களில் பணியாற்றுகின்றவர்களும் கிடைத்த சந்தர்ப்பத்தினை பெரும் பாக்கியமாகக்கொண்டு நாட்டினதும் நாட்டு மக்களினதும் நலன் கருதி சேவையாற்ற வேண்டும் -என்றார்.

(அ)

# ஜப்பான் தூதரக பிரதிநிதிகளுடன் எம்.எஸ்.தௌபீக் எம்.பி. சந்திப்பு



திருமலை, பெப். 23

இலங்கைக்கான ஜப்பான் நாட்டின் தூதரகப் பிரதிநிதிகளுக்கும் திருகோணமலை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் எம்.எஸ் தௌபீக்கிற்கும் இடையிலான முக்கிய கலந்துரையாடலொன்று கொழும்பிலுள்ள ஜப்பான் தூதரகத்தில் கடந்த புதன்கிழமை இடம்பெற்றது.

இதன்போது சமகால அரசியல் விவகாரம் தொடர்பாக முக்கிய விடயங்கள் கலந்துரையாடப்பட்டதுடன் திருகோணமலை மாவட்ட அபிவிருத்தி மற்றும் தற்போதைய நிலமைகள் சம்மந்தமாகவும் மாவட்ட மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்துவது தொடர்பிலும் பேசப்பட்டது.

திருகோணமலை மாவட்டத்திற்கு உதவுவதற்கு தாம் தயாராக இருப்பதாக ஜப்பான் நாட்டு தூதரக பிரதிநிகள் பாராளுமன்ற உறுப்பினருடன் தெரிவித்திருந்தது குறிப்பிடத்தக்கது.

(அ)

# கல்முனை வலயத்தில் முதலிடம் பெற்ற கார்மேல் பற்றிமாவுக்கு நற்சான்றிதழ்!

அம்பாறை, பெப். 23

கல்முனை வலயத்தில் கடந்த கபொத சாதாரண தர பரீட்சையில் அதிகூடிய சித்தி வீதத்தை பெற்று முதலிடத்தில் சாதனை படைத்த கல்முனை கார்மேல் பற்றிமா கல்லூரிக்கு சிறப்பு நற்சான்றிதழ் வழங்கி வைக்கப் பட்டது.

அச்சான்றிதழை கல்முனை வலயக்கல்விப் பணிப்பாளர் எம் எஸ். சஹுதுல் நஜீம் பற்றிமா கல்லூரியின் அதிபர் அருட்சகோதரர் ச.இ.றெஜினோல்ட்க்கு வழங்கி வைத்தார்.

இந் நிகழ்வு கல்முனை வலயக்கல்வி அலுவலகத்தில் நேற்று முன்தினம் இடம் பெற்ற அதிபர்களுக்கான கூட்டத்தில் கடந்த வருடம் 2022(2023) இடம்பெற்ற க.பொ.த சாதாரண தர பரீட்சைப் பெறுபேற்றில் குறித்த பாடசாலையானது கல்முனை வலயத்தில் அதிகூடிய சித்தி வீதத்தினைப் பெற்றதைப் பாராட்டும் வகையில் வலயக்கல்விப் பணிப்பாளரினால் நற்சான்றிதழ் வழங்கிவைக்கப் பட்டது.

அதனையொட்டி பாடசாலை சமூகம் இவ்வெற்றிக்குப் பங்களிப்புச்செய்த அதிபர், பிரதி அதிபர்கள், உப அதிபர்கள், பகுதித்தலைவர்கள், வகுப்பாசிரியர்கள், பாட ஆசிரியர்கள், கல்வி சாரா உத்தியோகத்தர்கள், பாடசாலை அபிவிருத்திச் சங்கம், பழைய மாணவர் சங்க உறுப்பினர்கள் மற்றும் ஏனைய நலன் விரும்பிகள் அனைவருக்கும் பாடசாலைச் சமூகம் சார்பில் நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றது என பிரசுரம் வெளியிடப்பட்டுள்ளது.

(அ)



# அன்று நீதிமன்றமாக விளங்கிய ஆலயங்கள் இன்று நீதிமன்றத்தில்!

## அம்பாறை மேலதிக அரசாங்க அதிபர் ஜெகதீசன் கவலை

அம்பாறை, பெப். 23

"அன்றைய காலகட்டத்தில் ஆலயங்கள் சமூகத்தை வழிநடத்தும் நீதிமன்றமாகவும் விளங்கியது. ஆனால் இன்று நிர்வாக சிக்கலில் மாட்டி பல ஆலயங்களில் நீதிமன்றத்தில் நிற்கின்றன. இது தவிர்க்கப்பட வேண்டும்."

-இவ்வாறு மடத்தடி மீனாட்சி அம்மனாலய விசேட நிர்வாக சபை கூட்டத்தில் உரையாற்றிய அம்பாறை மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் வேதநாயகம் ஜெகதீசன் கவலை தெரிவித்தார் .

நிந்தவூர் மாட்டுப்பழை மடத்தடி மீனாட்சியம்மன் ஆலய விசேட நிருவாக சபைக் கூட்டம் கடந்த சனிக்கிழமை ஆலய பரிபாலன சபையின் தலைவர் கே.ஜெயசிறில் தலைமையில் ஆலய அன்னதான மண்டபத்தில் நடைபெற்றது.

அங்கு அவர் மேலும் கூறுகையில்-

அம்பாறை மாவட்டத்தில் இன்று 21 ஆலயங்கள் நீதிமன்றத்தில் நிற்கின்றன. பணம் நேரம் என்பன வீணாக விரயமாகின்றன. உகந்தமலை முருகன் ஆலயமும் நீதிமன்றில் உள்ளதை அறிவீர்கள். அதனால் லாகுகலை பிரதேச செயலாளர் வசம் அவ் ஆலயம் பரிபாலிக்கப்படுகிறது.

விசேட அமைவிடம் பொருந்திய இவ் ஆலயம் மிகவும் பலத்த சவால்களுக்கு மத்தியில் கும்பாபிஷேகம் கண்டு புதுப்பொலிவு பெற்று வருகிறது. அதற்காக இந்த ஆலய நிர்வாக சபையை பாராட்டுகின்றேன். அதேவேளை இங்குள்ள நிர்வாக நடவடிக்கைகள் சீரமைக்கப்பட வேண்டும். அந்த ரீதியிலே இந்த கூட்டம் இடம்பெறுகின்றது-என்றார்.

கூட்டத்தில் ஆலய பரிபாலன சபையின் ஆலோசகர்களான வி.ரி.சகாதேவராஜாகர், வா.குணாளன், வி.ஜயந்தன் மற்றும் நிர்வாக சபை உறுப்பினர்கள் கலந்துகொண்டார்கள்.

மாவட்ட கலாசார உத்தியோகத்தர் கு.ஜெயராஜி நிந்தவூர் பிரதேச செயலக கலாச்சார உத்தியோகத்தர் ஆகியோரும் சமூகமளித்திருந்தனர். அவர்கள் முன்னிலையில் விசேட கூட்டம் இடம்பெற்றது.

எதிர்வரும் 16ஆம் தேதி சங்காபிஷேகம் இடம்பெற இருக்கின்றது. அவ்வேளையில் ஆலய வரலாற்று நூலான " "மரகதம் "என்ற நூல் வெளியிட்டு வைக்கப்படவிருக்கிறது என தலைவர் கூறினார்.

(அ)

# கல்முனை வலய பாடசாலைகளுக்கான இலவச சீருடை, நூல் விநியோக நிகழ்வு

அம்பாறை, பெப். 23

கல்முனை வலயப் பாடசாலைகளுக்கான இலவச சீருடை மற்றும் இலவச நூல் விநியோக நிகழ்வு நேற்று முன் தினம் இடம்பெற்றது.

மாவட்ட அபிவிருத்திக் குழுவின் தலைவரது பங்கேற்புடன் நடைபெற வேண்டுமென்ற கல்வியமைச்சின் பணிப்பரைக்கமைய கல்முனை வலயக் கல்விப்பணிப்பாளர் எம்.எஸ்.சஹுதுல் நஜீம் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வுக்கு கல்முனைத் தொகுதி அபிவிருத்திக் குழு தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான எஸ்.எம்.எம். முஸாரப் பிரதம அதிதியாகக் கலந்துகொண்டார்.

மேலும் மாணவர்களது கலை நிகழ்வுடன் இடம்பெற்ற இந் நிகழ்வில் கல்முனை வலயத்திலுள்ள கல்முனை முஸ்லிம் மற்றும் கல்முனை தமிழ் கோட்டங்களைச் சேர்ந்த 31 பாடசாலை மாணவர்களுக்கு இவ் விநியோக நடவடிக்கைகள் இடம்பெற்றன.

இதன் போது பிரதிக் கல்விப் பணிப்பாளர்கள்,கோட்டக் கல்விப் பணிப் பணிப்பாளர்கள், அதிபர்கள் உட்பட பலரும் கலந்து கொண்டனர்.

(அ)

## நியூசிலாந்துடனான ரி - 20

# கடைசிப் பந்தில் ஆஸி. 'த்ரில்' வெற்றி!



வெலிங்டன், பெப். 23

நியூசிலாந்து நிர்ணயித்த 216 ஓட்டங்கள் என்ற இமாலய இலக்கை கடைசிப் பந்தில் எட்டி த்ரில் வெற்றி பெற்றது அவுஸ்திரேலிய அணி.

நியூசிலாந்து - அவுஸ்திரேலிய அணிகளுக்கு இடையிலான முதலாவது இருபது - 20 போட்டி நேற்றுமுன் தினம் நடந்தது.

வெலிங்டனில் உள்ள ஸ்கை மைதானத்தில் நடைபெற்ற போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய நியூசிலாந்து நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவர்களில் 3 விக்கெட்கள் இழப்புக்கு 215 ஓட்டங்கள் குவித்தது.

அதிகபட்சமாக ரச்சின் ரவீந்திரா 35 பந்துகளில், 6 சிக்ஸர்கள், 2 பௌண்ட்ரிகளுடன் 68 ஓட்டங்களும் டெவன் கொன்வே 46 பந்துகளில், 2 சிக்ஸர்கள், 5 பௌண்ட்ரிகளுடன் 63 ஓட்டங்களும் விளாசினர்.

216 ஓட்டங்கள் இலக்குடன் துடுப்பெடுத்தாடிய அவுஸ்திரேலிய அணி ஒரு கட்டத்தில் 17 ஓவர்களில் 4 விக்கெட்கள் இழப்புக்கு 173 ஓட்டங்கள் எடுத்தது. ட்ராவிஸ் ஹெட் 24, டேவிட் வோர்ணர் 32, கிளென் மேக்ஸ்வெல் 25, ஜோஷ் இங்லிஷ் 20 ஓட்டங்களில் ஆட்டமிழந்தனர்.

அணித்தலைவர் மிற்செல் மார்ஷ், ரிம் டேவிட் ஆகியோர் களத்தில் இருந்த நிலையில் வெற்றிக்கு கடைசி 3 ஓவர்களில் 43 ஓட்டங்கள் தேவையாக இருந்தது. லக்கி பெர்குசன் வீசிய 18ஆவது ஓவரில் மிற்செல் மார்ஷ் சிக்ஸர் ஒன்றை விளாச அந்த ஓவரில் 8 ஓட்டங்கள் சேர்க்கப்பட்டன.

அடம் மில்னே வீசிய அடுத்த ஓவரை ரிம் டேவிட் பதம் பார்த்தார். இந்த ஓவரில் ரிம் டேவிட் ஒரு பௌண்ட்ரி, 2 சிக்ஸர்களை விளாச 19 ஓட்டங்கள் கிடைத்தன. ரிம் சௌதி வீசிய கடைசி ஓவரில் அவுஸ்திரேலிய அணியின் வெற்றிக்கு 16 ஓட்டங்கள் தேவைப்பட்டன.

முதல் பந்தை டிம் சௌதி அகலப்பந்தாக (வைட்) வீசினார். தொடர்ந்து வீசப்பட்ட 3 பந்துகளில் 3 ஓட்டங்கள் சேர்க்கப்பட்டன. 4ஆவது பந்தை ரிம் டேவிட் சிக்ஸருக்கு பறக்க விட்டார். இதையடுத்து ஆட்டத்தில் பரபரப்பு ஏற்பட்டது.

கடைசிப் பந்தில் வெற்றிக்கு 4 ஓட்டங்கள் தேவைப்பட்டன. ரிம் சௌதி யோர்க்கர் வீச முயன்றார். ஆனால் பந்து முழு அளவிலானதாக மாறியது. இதனை, ரிம் டேவிட் பௌண்ட்ரிக்கு விரட்ட அவுஸ்திரேலிய அணி வெற்றி பெற்றது. 20 ஓவர்களில் 4 விக்கெட்கள் இழப்புக்கு 216 ஓட்டங்கள் எடுத்து 6 விக்கெட்கள் வித்தியாசத்தில் அவுஸ்திரேலியா வெற்றி பெற்றது.

மிற்செல் மார்ஷ் 44 பந்துகளில், 7 சிக்ஸர்கள், 2 பௌண்ட்ரிகளுடன் 72 ஓட்டங்களும் ரிம் டேவிட் 10 பந்துகளில், 3 சிக்ஸர்கள், 2 பௌண்ட்ரிகளுடன் 31 ஓட்டங்களும் விளாசி ஆட்டமிழக்காமல் இருந்தனர்.

இந்த வெற்றியின் மூலம் 3 போட்டிகள் கொண்ட இருபது - 20 கிரிக்கெட் தொடரில் அவுஸ்திரேலிய அணி 1-0 என முன்னிலை வகிக்கிறது.

(ஐ)

# விக்ரம் - ராஜன் - கங்கு கிண்ணம் கொக்குவில் இந்துவில் இன்று!

யாழ்ப்பாணம், பெப். 23

கொக்குவில் வளர்மதி முன்னேற்றக் கழகமும் சனசமூக நிலையமும் இணைந்து நடத்தும் விக்ரம் - ராஜன் - கங்கு ஞாபகார்த்த சுற்றுப் போட்டியின் 33ஆவது தொடர் இன்று வெள்ளிக்கிழமை காலை 8:30 மணிக்கு கொக்குவில் இந்துக் கல்லூரி மைதானத்தில் ஆரம்பமாகிறது.

இதில், யாழ்ப்பாணத்தின் பிரபல கழகங்களான 6 கழகங்கள் பங்கேற்கின்றன. கொக்குவில் மத்திய சனசமூக நிலைய அணி, யாழ். பல்கலைக்கழக அணி, ஜொலி ஸ்ரார்ஸ் அணி, யூனியன் விளையாட்டுக் கழகம், ஜொனியன்ஸ் விளையாட்டுக் கழகம் மற்றும் கிராஸ் கொப்பர்ஸ் விளையாட்டுக் கழக அணிகள் பங்கேற்கின்றன.

30 ஓவர்கள் கொண்ட கடினபந்து போட்டியாக இது அமையும். இறுதிப் போட்டி 40 ஓவர்கள் கொண்டதாகும்.

(ஐ)

## இந்தியா - இங்கிலாந்து டெஸ்ட் அணியிலிருந்து பும்ரா விடுவிப்பு; கே.எல்.ராகுல் விளையாடவில்லை



மும்பை, பெப். 22

இந்தியா மற்றும் இங்கிலாந்து அணிகளுக்கு இடையிலான 4ஆவது டெஸ்ட் போட்டிக்கான இந்திய அணியில் இருந்து பும்ரா விடுவிக்கப்பட்டுள்ளார். அதேபோல இந்த போட்டியில் கே. எல். ராகுலும் பங்கேற்க மாட்டார் என இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டு சபை (பி. சி. சி. ஐ.) தெரிவித்துள்ளது.

இங்கிலாந்து கிரிக்கெட் அணி இந்தியா சென்று 5 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் விளையாடி வருகிறது. இந்த தொடரில் 3 போட்டிகள் நடந்து முடிந்துள்ளன. 2-1 என்ற கணக்கில் இந்தியா முன்னிலை வகிக்கிறது. தொடரின் 4ஆவது போட்டி ராஞ்சி நகரில் இன்று தொடங்குகிறது. இந்தப் போட்டிக்கான இந்திய அணி விவரத்தை பி. சி. சி. ஐ. வெளியிட்டுள்ளது.

அந்த வகையில் ஜஸ்பிரீத் பும்ராவின் பணிச்சுமையை கருத்தில் கொண்டு அவருக்கு ஓய்வு அளிக்கப்பட்டுள்ளது. இந்த தொடரில் மொத்தமாக 17 விக்கெட்களை வீழ்த்தி உள்ள பும்ரா, அதிக விக்கெட்கள் வீழ்த்தியவர்களின் பட்டியலில் முதலிடத்தில் உள்ளார்.

தசைப் பிடிப்பு காரணமாக இரண்டு மற்றும் மூன்றாவது டெஸ்ட் போட்டியில் இருந்து விலகிய கே.எல். ராகுல், நான்காவது போட்டியிலும் பங்கேற்க மாட்டார் என தெரிவிக்கப்பட்டுள்ளது. அவர் முழு உடற்தகுதியை எட்டும் நிலையில் தரம்சாலா போட்டியில் பங்கேற்பார் எனவும் பி. சி. சி. ஐ. தெரிவித்துள்ளது. அதே நேரத்தில் அணியில் வேகப்பந்து வீச்சாளர் முகேஷ் குமார் சேர்க்கப்பட்டுள்ளார்.

**இந்திய அணி** - ரோகித் சர்மா (கப்டன்), ஜெய்ஸ்வால், ஷுப்மன் கில், ரஜத் பட்டிதார், சர்பராஸ் கான், துருவ் ஜுரெல் (விக்கெட் காப்பாளர்), கே.எஸ்.பரத் (விக்கெட் காப்பாளர்), தேவ்தத் படிக்கல், அஸ்வின், ஜடேஜா, அக்சர் பட்டேல், வாஷிங்டன் சுந்தர், குல்தீப் யாதவ், முகமது சிராஜ், முகேஷ் குமார், ஆகாஷ் தீப்.

## அதிவேகமாக 100 விக்கெட்கள் வீழ்த்தினார் வனிந்து ஹசரங்க




கொழும்பு, பெப். 23

சர்வதேச இருபது - 20 போட்டிகளில் அதிவேகமாக 100 விக்கெட்களை எடுத்த இரண்டாவது வீரராக இலங்கை அணியின் வனிந்து ஹசரங்க மாறியுள்ளார்.

ஆப்கானிஸ்தானுக்கு எதிரான இரண்டாவது இருபது -20 போட்டியின்போது இந்த சாதனையை அவர் படைத்தார். ஹசரங்க 2 விக்கெட்களைக் கைப்பற்றினார். இதன்மூலம், சர்வதேச இருபது -20 போட்டிகளில் அதிவேகமாக 100 விக்கெட்கள் வீழ்த்திய 2ஆவது வீரராக அவர் உருவெடுத்தார். அவர் தனது 63ஆவது சர்வதேச போட்டியில் இந்த சாதனையைப் படைத்துள்ளார்.

53 சர்வதேச இருபது -20 போட்டிகளில் 100 விக்கெட்களைக் கைப்பற்றி அதிவேகமாக 100 விக்கெட்கள் வீழ்த்தியவர்கள் பட்டியலில் ஆப்கானிஸ்தான் வீரர் ரஷித் கான் முதலிடத்தில் உள்ளமை குறிப்பிடத்தக்கது.

(ஐ)

## அரினா சபலெங்கா அதிர்ச்சி தோல்வி!


டுபாய், பெப். 23

டுபாய் சம்பியன்ஷிப் ரென்னிஸ் தொடரில் மகளிர் ஒற்றையர் பிரிவில் உலகத் தரவரிசையில் 2ஆவது இடத்தில் உள்ள பெலாரஸின் அரினா சபலெங்கா அதிர்ச்சி தோல்வி அடைந்தார்.

டுபாயில் நடைபெற்று வரும்இந்தத் தொடரில் மகளிர் ஒற்றையர் பிரிவு 2ஆவது சுற்று ஆட்டத்தில் உலகத் தரவரிசையில் 2ஆவது இடத்தில் உள்ள பெலாரஸின் அரினா சபலெங்கா, 31ஆம் நிலை வீராங்கனையான குரோஷியாவின் டோனா வெகிக்குடன் மோதினார். இதில் டோனா வெகிக் 6-7 (5), 6-3, 6-0 என்ற செற் கணக்கில் அரினா சபலெங்காவை தோற்கடித்தார்.

இன்னோர் ஆட்டத்தில் விம்பிள்டன் சம்பியனான செக்குடியரசின் மார்கெட்டா வோண்ட்ருசோவா 6-1, 5-7, 6-2 என்ற செற் கணக்கில் அமெரிக்காவின் பெய்டன் ஸ்டெர்ன்ஸை வீழ்த்தினார்.

(ஐ)



# முஸ்லிம் சமூகத்தை ஓரக் கண்ணால் பார்க்கும் நிலை இன்னும் நீங்கவில்லை

## மக்கள் காங்கிரஸ் தலைவர் ரிஷாத் சபையில் விசனம்



கொழும்பு, பெப். 23

**உயிர்த்த ஞாயிறு தாக்குதலின் பின்னர், முஸ்லிம் சமூகத்தை ஓரக்கண்ணால் பார்க்கும் நிலை இன்னும் நீங்கியபாடில்லை என்று அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான ரிஷாத் பதியுதீன் தெரிவித்துள்ளார்.**

நேற்று முன்தினம் பாராளுமன்றத்தில் உரையாற்றிய அவர் மேலும் கூறியதாவது,

இந்த நாட்டின் பொருளாதாரம் தற்போது மிக மோசமான நிலையில் காணப்பட்டாலும் என்றாவது ஒருநாள் மீள் எழுச்சிபெறும் என்ற நம்பிக்கையோடு மக்கள் இருக்கின்றார்கள். ஆனாலும், அரசாங்கம் இந்த விடயத்தில் தொடர்ந்தும் அசமந்தப் போக்கில் செயற்படுவதை சுட்டிக்காட்ட வேண்டிய கடப்பாடு எமக்குள்ளது.

குறிப்பாக, விவசாயம் என்பது இந்த நாட்டின் முதுகெலும்பாகும். விவசாயிகள் மீதான அடக்குமுறையே கடந்த கோட்டா அரசாங்கத்தின் வீழ்ச்சிக்கு முக்கிய ஒரு காரணமாகும். எனவே, கோட்டா அரசாங்கத்தைப் பொறுப்பேற்றுள்ள புதிய ஜனாதிபதிக்கு விவசாயிகளின் பிரச்சனைகளுக்கு தீர்வு வழங்க வேண்டிய தேவை இருக்கின்றது என்பதை இந்த உயர்சபையில் கூறிக்கொள்ள விரும்புகின்றேன்.

அம்பாறை மாவட்டத்தின் அட்டாளைச்சேனை, ஒலுவில், பாலமுனை, பொத்துவில், அக்கரைப்பற்று, இறக்காமம், வரிப்பத்தாஞ்சேனை, நிந்தவூர் மற்றும் சம்மாந்துறை உள்ளிட்ட பல பிரதேசங்களில் அதிகமான விவசாயிகள் வெள்ளத்தினால் பாதிக்கப்பட்டுள்ளனர். கடனிலிருந்து மீள முடியாமல் கஷ்டப்படுகின்றனர். அவர்களுக்கான காப்புறுதித் திட்டம் ஒன்றை நடைமுறைப்படுத்துவதாக கூறியிருந்தாலும், அவர்கள் அந்தத் திட்டத்தில் சரியான முறையில் உள்வாங்கப்படவில்லை. அவர்களுக்கான கொடுப்பனவுகளை உரிய முறையில் வழங்குவதற்கு எந்தவொரு ஆக்கபூர்வமான நடவடிக்கையும் இதுவரை மேற்கொள்ளப்படவில்லை என்பதை வேதனையோடு தெரிவித்துக்கொள்கின்றேன்.

மட்டக்களப்பு, திருகோணமலை, மன்னார், வவுனியா, முல்லைத்தீவு மற்றும் புத்தளம் உள்ளிட்ட மாவட்டங்களில் கூட விவசாயிகளுக்கு ஏற்பட்டுள்ள பாதிப்புக்களுக்கான காப்புறுதித் திட்டம் முறையாக செயல்படுத்தப்படவில்லை என அறிய முடிகின்றது. அண்மையில் இடம்பெற்ற மன்னார், வவுனியா, முல்லைத்தீவு மாவட்ட ஒருங்கிணைப்புக் குழு கூட்டங்களில், விவசாயிகள் மிகவும் வேதனையுடன் தாம் எதிர்நோக்குகின்ற கஷ்டங்களை கூறியிருந்தார்கள். சில பகுதிகளில் குறிப்பிட்ட காப்புறுதித் திட்டம் நடைமுறையில் இருந்தாலும், அவை ஒருதலைப்பட்சமாகவும் அதிகாரிகளுக்கு விரும்பிய வகையில் வழங்கப்படுவதாகவும் பாதிக்கப்பட்டுள்ள மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர். எனவே, விவசாய அமைச்சர் இந்த விடயத்தில் கவனஞ்செலுத்தி, கடனிலிருந்து விவசாயிகளை காப்பதற்கு தேவையான நடவடிக்கைகளை எடுக்குமாறு வேண்டுகோள் விடுக்கின்றேன்.

அதேபோன்று, வட மாகாண மீனவர்கள், இந்திய மீனவர்களின் அத்துமீறல்கள் மற்றும் கடற்படையினரின் இடையூறுகளால் மிகவும் பாதிக்கப்பட்டுள்ளனர். அன்றாடம் பல சிரமங்களுக்கு முகம்கொடுக்க வேண்டியுள்ளனர். எனவே, விடயத்துக்குப் பொறுப்பான அமைச்சர், இந்த விடயங்களில் கவனஞ்செலுத்தி, மீனவர்கள் எதிர்நோக்கும் பிரச்னைகளை தீர்ப்பதற்கு ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை முன்னெடுக்குமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

மேலும், அம்பாறை, மன்னார், வவுனியா, முல்லைத்தீவு மாவட்டங்களில் உள்ள விவசாயிகள், நெல் கொள்வனவுக்கான எந்தவொரு ஆக்கபூர்வமான நடவடிக்கையையும் அரசாங்கம் முன்னெடுக்கவில்லை என்று எம்மிடம் முறையிடுகின்றனர். வியாபாரிகள் தங்களுக்கேற்ற வகையில் விலையை நிர்ணயித்து, மிகவும் குறைந்த விலையில் நெல் கொள்வனவு மேற்கொள்கின்றனர். இதனால் கடனிலிருக்கும் விவசாயிகள் தாக்குப்பிடிக்க முடியாமல் கஷ்டப்படுகின்றார்கள். எனவே, விவசாயிகளுக்கு நியாயம் கிடைக்கும் வகையில் நெல் கொள்வனவு மேற்கொள்ளப்பட வேண்டும்.

அதேபோன்று, உயிர்த்த ஞாயிறு தாக்குதலின் பின்னர் முஸ்லிம் சமூகத்தை ஓரக்கண்ணால் பார்க்கும் நிலை இன்னும் நீங்கியபாடில்லை. அல்குர்ஆனை அல்லது ஒரு அரபுப் புத்தகத்தை வெளிநாட்டிலிருந்து இலங்கைக்கு கொண்டுவர முடியாத துர்ப்பாக்கிய நிலை காணப்படுகிறது. கோட்டாபய ஜனாதிபதியாக இருந்த காலத்தில், அரபுப் புத்தகங்களை இந்த நாட்டிற்குள் அனுமதிக்க வேண்டாம் என்று, அப்போதைய பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஒரு கடிதத்தை அனுப்பியுள்ளார். உலக மக்கள் அனைவராலும் அறியப்படுகின்ற, போற்றப்படுகின்ற இஸ்லாமியர்களின் வேதநூலான அல்குர்ஆனைக் கூட இந்த நாட்டிற்குள் கொண்டுவர முடியாத துர்ப்பாக்கிய நிலை காணப்படுகின்றது. அரபுக் கல்லூரிக்கு தேவையான புத்தகங்களைக் கூட கொண்டுவர முடியாதுள்ளது. ஆன்லைனில் அனைத்துவிதமான புத்தகங்களையும் படிக்கக்கூடிய சூழலில் நாம் இருக்கின்ற போதும், இலங்கையில் மாத்திரமே இவ்வாறு புத்தகங்களைக் கொண்டுவருவதற்கு தடை செய்யப்பட்டுள்ளது. அரபு நாடுகளில் இருந்துவரும் சுற்றுலாப் பயணிகள், அவர்களுக்கு தேவையான ஒரு புத்தகத்தை கொண்டுவரும் பட்சத்தில் அதை பறித்தெடுக்கின்றனர். இந்தப் பிரச்னைக்கு ஜனாதிபதி ஒரு நிமிடத்தில் தீர்வுகாண முடியும். எனவே, தற்போது பாதுகாப்பு அமைச்சராக இருக்கின்ற ஜனாதிபதி, பாதுகாப்புச் செயலாளருக்கு குறித்த கடிதத்தினை மீளப்பெற அறிவுறுத்துமாறு வேண்டிக் கொள்கின்றேன்-என்றார். (அ)

# ஆயிரத்துக்கும் மேற்பட்ட பேக்கரிகள் மூடப்பட்டன

கொழும்பு, பெப். 23

அதிக நீர், மின்சார கட்டணம் மற்றும் ஏயுவு காரணமாக, பேக்கரிகள் உட்பட பாண் உற்பத்தி செய்யும் ஆயிரத்துக்கும் மேற்பட்ட வெதுப்பகங்கள் நாடு முழுவதும் மூடப்பட்டுள்ளதாக பேக்கரி உரிமையாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

பேக்கரி உற்பத்திகளின் விலை அதிகரிப்பு, முட்டையின் விலை அதிகரிப்பு மற்றும் நுகர்வோர் பேக்கரி பொருட்களின் பாவனையிலிருந்து விலகியமை போன்ற காரணங்களால் பேக்கரி தொழில்துறை பின்னடைவை சந்தித்துள்ளதாக அதன் தலைவர் என்.கே.குணவர்தன தெரிவித்துள்ளார்.

இதேவேளை, பாணுக்கான வர்த்தமானியின் பிரகாரம், தேவையான எடை மற்றும் விலையை காட்சிப்படுத்தாத 453 பேக்கரிகள் மற்றும் கடைகளுக்கு எதிராக வழக்குத் தொடர நடவடிக்கை எடுத்து வருவதாக நுகர்வோர் விவகார அதிகார சபை தெரிவித்துள்ளது.

ஒரு பாணின் எடை 450 கிராம் எனவும், அதிகபட்சமாக 13.05 கிராம் எடையைக் குறைக்க வேண்டும் எனவும் அதிகார சபை அண்மையில் வர்த்தமானி அறிவித்தலை வெளியிட்டிருந்தது.

அரை கிராம் பாணின் எடை 225 கிராம் என்றும், குறைக்கக் கூடிய அதிகபட்ச எடை 09 கிராம் என்றும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்ட போதிலும் பல பேக்கரி கடைகளில் நிர்ணயிக்கப்பட்ட எடைக்கு ஏற்ப பாண் விற்பனை செய்யப்படுவதில்லை என தெரிவிக்கப்படுகிறது.

அதன்படி, கடந்த பெப் ரவரி மாதம் 5ஆம் திகதி முதல் 20ஆம் திகதி வரை மேற்கொள்ளப்பட்ட சோதனையின் போது, தேவையான எடை மற்றும் விலையை காட்சிப்படுத்தாத 453 பேக்கரிகள் மற்றும் கடைகளை நுகர்வோர் அதிகாரசபை கண்டறிந்துள்ளது.

அந்த பேக்கரிகள் மற்றும் கடைகளுக்கு எதிராக வழக்கு பதிவு செய்ய நடவடிக்கை எடுத்து வருவதாகவும், இது தொடர்பாக ஏதேனும் புகார்கள் இருப்பின் நுகர்வோர் விவகார அதிகாரசபையின் அவசர தொலைபேசி எண்ணான 1977க்கு தொடர்பு கொண்டு தமக்கு அறிவிக்கலாம் என்றும் நுகர்வோர் விவகார அதிகாரசபை அறிவித்துள்ளது.

# காலிமுகத்திடல் காணியை எவருக்குமே வழங்கவில்லை

## கூறுகிறார் பிரசன்ன ரணதுங்க



கொழும்பு, பெப். 23

காலிமுகத்திடல் காணி எந்தவொரு முதலீட்டாளருக்கும் வழங்கப்படவில்லை என நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்துள்ளார்.

நேற்று பாராளுமன்றத்தில் உரையாற்றும் போதே அவர் அமைச்சர் இதனை தெரிவித்தார்.

தேசிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் விஜித ஹேரத் தெரிவித்த கருத்து பொய்யானது என்றும் அடிப்படை ஆதாரமற்றது மற்றும் மக்களை தவறாக வழிநடத்துவதாகவும் அவர் குற்றம் சுமத்தியுள்ளார்.

இதேவேளை முதலீட்டாளர்களை நாட்டுக்கு கொண்டு வருவதற்கு அரசாங்கம் செயற்படும் போது எதிர்க்கட்சிகள் தவறான கருத்துக்களை மக்கள் மத்தியில் பரப்ப முயற்சிப்பதாகவும் அவர் கூறினார்.

மேலும் அரசாங்க வெளிநாட்டு முதலீட்டாளர்களுக்கு காணிகள் வழங்கப்பட மாட்டாது எனவும் அமைச்சர் இதன் போது குறிப்பிட்டுள்ளார். (அ)

# மலையக மக்களை இழிவுபடுத்திய அதிகாரியை உடன் பணி நீக்குக!

கொழும்பு, பெப். 23

“மலையக பொருந்தோட்ட மக்களை இழிவுபடுத்தும் வகையில் கருத்து வெளியிட்டுள்ள இலங்கை மின்சார சபையின் ஊடகப் பேச்சாளருக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுங்கள்.”

இவ்வாறு எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாச பாராளுமன்றத்தில் நேற்று வலியுறுத்தினார்.

“ இந்நாட்டில் பெருந்தோட்டங்களை அண்டிய ஆண் சமூகம் பிற்பகல் 2 மணியாகும் போது மது அருந்துவதாக இலங்கை மின்சார சபையின் ஊடகப் பேச்சாளர் தொலைக்காட்சி நிகழ்ச்சி ஒன்றில் குறிப்பிட்ட கருத்தானது ஒட்டு மொத்த பெருந்தோட்ட சமூகத்தையும் அவமதிக்கும் செயலாகும்.

கருத்துக்களை வெளியிட்ட மின்சார சபையின் ஊடகப் பேச்சாளர் மீது ஒழுக் காற்று நடவடிக்கை எடுக்கப் பட வேண்டும். இவரை பணி நீக்கம் செய்து இவருக்கு எதிராக நடவடிக்கை எடுக்க வேண்டும்.” என்றார்.

# எதிர்ப்புகளால் மின்சார சபையின் ஊடகப் பேச்சாளர் இராஜினாமா!

கொழும்பு, பெப். 23

அமைச்சர் ஜீவன் தொண்டமான் உட்பட சமூக செயற்பாட்டாளர் களிடமிருந்து எழுந்த கடும் எதிர்ப்பையடுத்து இலங்கை மின்சார சபையின் ஊடகப் பேச்சாளர் அப்பதவியில் இருந்து விலகியுள்ளார்.

“ அவரின் கருத்து இலங்கை மின்சார சபையினதோ அல்லது அரசாங்கத்தினதோ, அமைச்சினதோ கருத்து அல்ல. அவர் வெளிப்படுத்திய கருத்துக்காக மன்னிப்பு கோருகின்றேன். ஊடகப் பேச்சாளர் பதவியில் இருந்து அவர் விலகியுள்ளார்.” - என்று எரிசக்தி மற்றும் மின் சக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகர தெரிவித்துள்ளார்.

மின்சார சபையின் ஊடக பேச்சாளரின் கருத்தை அமைச்சர் ஜீவன் தொண்டமான், வன்மையாகக் கண்டித்ததுடன், அது ஏற்றுக்கொள்ள முடியாதது என தனது எக்ஸ் தளத்தில் குறிப்பிட்டிருந்தார். அத்துடன், இவர் தொடர்பில் உரிய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என அமைச்சர் காஞ்சனவிடம் வலியுறுத்தி இருந்தார்.

இதற்கு பதிலளிக்கையிலேயே அமைச்சர், ஊடகப்பேச்சாளர் பதவியில் இருந்து அவர் விலகிவிட்டதாகவும், மன்னிப்பு கோருவதாகவும் அறிவித்துள்ளார். (அ)

## வீடு புகுந்து...

மோட்டார் சைக்கிளை கட்டுப்படுத்த முடியாமல் விபத்துக்குள்ளாகி பல்கலைக்கழக மாணவன் உயிரிழந்தார்.

யாழ்.பல்கலைக்கழகத்தில் 1 ஆம் வருடத்தில் கலைப்பிரிவில் கல்வி கற்றுவரும் மானிப்பாய் வேம்படி பகுதியைச் சேர்ந்த ரமேஸ் சகீந்தன் (வயது-22) என்ற மாணவனே உயிரிழந்துள்ளார்.

மாணவன் உயிரிழந்த விவகாரம் மர்மமாக இருந்த நிலையில், மானிப்பாயை சேர்ந்த மற்றொரு இளைஞன் படுகாயமடைந்த நிலையில் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்தார்.

அவரிடம் நடத்தப்பட்ட விசாரணையில், உயிரிழந்த பல்கலைக்கழக மாணவனுடன் கூடப் பயணித்து, விபத்தில் சிக்கியவர் என்பது தெரிய வந்தது.

மானிப்பாயிலுள்ள அவரது வீட்டில் மறைத்து வைக்கப்பட்டிருந்த நிலையில், விபத்தில் சிக்கிய மோட்டார் சைக்கிள் மீட்கப்பட்டது.

உயிரிழந்த பல்கலைக்கழக மாணவன் மோட்டார் சைக்கிளை செலுத்தியதும், காயமடைந்த மற்றையவர் பின்னாலிருந்து சென்றதும் தெரிய வந்தது. விபத்தின் போது, அவர்களது மோட்டார் சைக்கிளில் கிரிக்கெட் மட்டை இருந்ததும் தெரிய வந்தது.

உயிரிழந்த மாணவன் அதிகாலை 2.58 மணிக்கு வீட்டிலிருந்து புறப்பட்டுள்ளார். அதிகாலை 4 மணியளவில் உடுப்பிட்டியில் தாக்குதல் முயற்சி நடந்தது.

இது குறித்து பொலிசார் பல்வேறு கோணங்களில் விசாரணை நடத்திய போது, வல்வெட்டித்துறை பொலிஸ் பிரிவில் உள்ள உடுப்பிட்டி பிரதேசத்தில் உள்ள வீடொன்றுக்குள் நுழைந்து தாக்குதல் நடத்தி, ஹைஏஸ் வாகனத்துக்கு தீ வைத்து விட்டு திரும்பி வரும் போதே பல்கலைக்கழக மாணவன் விபத்தில் சிக்கியது தெரிய வந்தது.

உயிரிழந்த பல்கலைக்கழக மாணவனும் நண்பனும் இணைந்து இந்த வன்முறை தாக்குதலில் ஈடுபட்டு விட்டு திரும்பி வரும் போது விபத்து நிகழ்ந்தது.

கொழும்பு- யாழ்ப்பாணம் சேவையில் ஈடுபடும் ஒருவரின் வீடு புகுந்து வீட்டு யன்னல் கண்ணாடிகளை அடித்து உடைத்ததுடன், ஹைஏஸ் வாகனத்துக்கு பெற்றோல் ஊற்றி தீவைத்துள்ளனர். எனினும், வீட்டிலிருந்தவர்கள் எச்சரிக்கையடைந்ததும் அவர்கள் தப்பியோடி விட்டனர்.

அங்கிருந்து வேகமாக தப்பிச் செல்லும் போதே நீர்வேலி, சிறுப்பிட்டி பகுதியில் விபத்தில் சிக்கியுள்ளனர். மோட்டார் சைக்கிளை செலுத்தி சென்ற பல்கலைக்கழக மாணவன் படுகாயமடைந்தார். அவரது வயிற்றின் கீழ் பகுதி கடுமையாக பாதிக்கப்பட்டிருந்தது. பல்சர் மோட்டார் சைக்கிளின் எரிபொருள் தாங்கி பகுதி தாக்கியதால் அவருக்கு உயிராபத்தான காயங்கள் ஏற்பட்டுள்ளன.

விபத்தை தொடர்ந்து, நண்பர்களுக்கு அறிவித்து, சம்பவத்தை மறைக்க அந்த இடத்தை சுத்தம் செய்து, தடயங்களை மறைத்ததுடன், காயமடைந்தவரை முச்சக்கர வண்டியில் ஏற்றிச் சென்று, பின்னர் நோயாளர் காவு வண்டியில் ஏற்றியனுப்பியுள்ளனர்.

அத்துடன், விபத்தில் சிக்கிய மோட்டார் சைக்கிளில் பயணித்த மற்றையவர், மோட்டார் சைக்கிளை தனது வீட்டுக்கு எடுத்து சென்று மறைத்து வைத்து விட்டு, சிகிச்சைக்காக யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்கு சென்றுள்ளார்.

ஒரு தலைக்காதல் விவகாரத்தினால் இந்த வன்முறை தாக்குதல் நடத்ததாக கருதப்படுகிறது. தாக்குதலில் ஈடுபட்ட தரப்பிலுள்ள ஒருவர் யுவதியொருவரை ஒரு தலையாக காதலித்ததாகவும், அந்த யுவதியுடன் பேசும் இளைஞன் ஒருவரை பழிவாங்கவே தாக்குதல் நடத்தப்பட்டதாகவும் சந்தேகிக்கப்படுகிறது.

(அ)

# மனைவிக்கு பரிசளிக்க 29 பவுண் நகையை களவாடிய கணவன் உட்பட இருவர் கைது!

யாழ்ப்பாணம், பெப். 23

காதலர் தினத்தன்று தனது மனைவிக்கு பரிசளிப்பதற்காக 29 பவுண் நகைகளை திருடிய சம்பவத்துடன் தொடர்புடைய கணவர் உள்ளிட்ட இருவர் யாழ்ப்பாணத்தில் கைது செய்யப்பட்டனர்.

வல்வெட்டித்துறையைச் சேர்ந்த 25 வயதான ஆணும் ஊர்காவற்துறையைச் சேர்ந்த 49 வயதான பெண்ணுமே காங்கேசன்துறை பிராந்திய குற்றத்தடுப்பு பிரிவு பொலிஸாரால் இவ்வாறு கைது செய்யப்பட்டனர்.

காதலர் தினத்தன்று வல்வெட்டித்துறை பகுதியில் முதியவர்கள் உள்ள வீட்டினுள் 29 பவுண் நகைகள் திருடப்பட்டன.

திருட்டுச் சம்பவம் தொடர்பாக வல்வெட்டித்துறை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டது.

இந்நிலையில் யாழ்ப்பாண நகரில் நேற்று முன் தினம் 4 பவுண் நகைகளை அடகு வைக்க சென்றபோது பெண்மணி ஒருவர் கைது செய்யப்பட்டார்.

சந்தேக நபரிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளை தொடர்ந்து பிரதான சந்தேக நபர் 25 பவுண் தாலியுடன் கைது செய்யப்பட்டார். கைது செய்யப்பட்ட இருவரும் மேலதிக நடவடிக்கைக்காக வல்வெட்டித்துறை பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டனர். (அ)

# யாழ். பல்கலைக்கழக விஞ்ஞானபீட மாணவர்கள் வகுப்புப் புறக்கணிப்பு

யாழ்ப்பாணம், பெப். 23

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக விஞ்ஞான பீட மாணவர்கள் காலவரையற்று கற்றல் செயற்பாடுகளில் இருந்து ஒதுங்கி இருக்க தீர்மானித்துள்ளனர்.

விஞ்ஞான பீடத்தில் கல்வி பயில்கின்ற மாணவர்களின் வரவு பிரச்னைகள் தொடர்பில் பல்கலைக்கழக விசேட நிர்வாகக் கூட்டத்தில் கலந்துரையாடுவதற்கு விஞ்ஞான பீட மாணவர் ஒன்றியத்தால் முன்வைக்கப்பட்ட கோரிக்கை நிராகரிக்கப்பட்ட நிலையில் நேற்று மதியம் முதல் போராட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

குறித்த போராட்டம் தொடர்பாக நேற்று முன்தினம் விஞ்ஞான பீட பீடாதிபதி மற்றும் துறைத் தலைவர்களுக்கு, விஞ்ஞான பீட மாணவர் ஒன்றியத்தினரால் எச்சரிக்கை கடிதமொன்று அனுப்பப்பட்டிருந்தது.

அக்கடிதத்தில் நேற்று நண்பகலுக்குள் சாதகமான முடிவு கிடைக்காது விட்டால் காலவரையற்ற போராட்டம் முன்னெடுக்கப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## ஆர். ஆர்...

அவரின் இறுதிச்சடங்கு நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை வவுனியாவிலுள்ள கட்சியின் பணிமனையில் நடைபெறும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

தமிழீழ விடுதலைப் போராட்டத்தில் 1980களில் இணைந்து கொண்ட அவர், உமா மகேஸ்வரன் தமிழீழ மக்கள் விடுதலை கழகத்தை (புளொட்) தொடங்கியது முதல் அதில் இயங்கிவந்தார். 1989ஆம் ஆண்டு புளொட் அமைப்பு மாலைதீவை கைப்பற்றும் நோக்கில் சென்ற படையணியில் இவரும் ஒருவராக இருந்தார். அந்தச் சமயம் இந்திய இராணுவத்தால் கைது செய்யப்பட்டவர்களில் இவரும் ஒருவராவார். 5 வருட சிறையின் பின்னர் அவர் விடுதலையானார். தொடர்ந்தும் புளொட் கட்சியுடன் இணைந்து பணியாற்றி வந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

(அ-ஐ)

## கடன் மறுசீரமைப்...

இந்தநிலையில், கடந்த 2022இல் இலங்கை குறைந்த வருமானம் பெறும் நாடாக தரமிறக்கப்பட்டது.

அத்துடன், கடன் மறுசீரமைப்பின் பின்னரான காலப்பகுதிகளில் இலங்கையின் கடன் சுமை மற்றும் மறுநிதியளிப்பு அபாயம் என்பவற்றை குறைப்பதற்கு எவ்வாறான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் எனவும் உலகலாவிய இறையாண்மை கடன் ஆராய்ச்சியாளர் தியோ மெரிட் இதன்போது வலியுறுத்தியுள்ளார்.

இதன்படி, நிதிக் கொள்கைகள் மற்றும் கடன் முகாமைத்துவக் கொள்கைகள் என்பவற்றை நடைமுறைப் படுத்துவதை இலங்கை முன்மாதிரியாக கொண்டு செயற்பட வேண்டும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கை சர்வதேச நாணய நிதியத்தின் இலக்குகளை, உரிய முறையில் சிறப்பாக முன்னெடுத்து வருகின்றது.

அத்துடன், கடன் மீளளிப்பதற்கான நிதி உத்தரவாத காலத்தை சீனா முதன் முறையாக இலங்கைக்கு மாத்திரமே வழங்கியுள்ளது

இதற்கமைய, இலங்கைகான வெளிநாட்டுகடனை மீளச் செலுத்தல், ஸ்திரத்தன்மையை அடையும்.

இதன்காரணமாக வெளிப்புற நிதிகள் நாட்டை வந்தடையும் என உலகலாவிய இறையாண்மை கடன் ஆராய்ச்சியாளர் தியோ மெரிட் தெரிவித்துள்ளார். (அ)

## கச்சதீவு...

மையும் நாளை சனிக்கிழமையும் நடைபெறவுள்ளது.

இதற்கான ஏற்பாடுகள் தொடர்பில் யாழ்ப்பாண மாவட்ட அரசாங்க அதிபர் ஏ. சிவபாலசுந்தரத்திடம் வினவிய போது-

இதற்கு பதிலளித்த அவர், உணவு, குடிதண்ணீர் வசதிகள் கடற்படையால் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக குறிப்பிட்டார்.

இதேவேளை, இராமேஸ்வரம் மீனவர்களின் போராட்டத்தால் இம்முறை இந்திய பக்தர்கள் திருவிழாவில் பங்கேற்கமாட்டார்கள் என்று அங்கிருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

தொடர்புடைய செய்தி பக்கம் 4இல்

(அ)

## கடந்து வந்த...

தொடங்க வேண்டும் என்றும் இதற்கு நிதிஒதுக்க வேண்டும் என்றும் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்களின் அழைப்பின்பேரில் வடக்கு, கிழக்கில் ஹர்த்தால் கடைப்பிடிக்கப் பட்டது. இதேசமயம், வட்டுவாகல் பாலத்திலிருந்து முல்லைத்தீவு மாவட்ட செயலகம் வரை பேரணி ஒன்றும் நடைபெற்றது.

**2023 ஓகஸ்ட் 08**

அகழ்வு பணிக்கு 56 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது. இந்த நிதியை ஜனாதிபதி நிதியம் வழங்கியதாக காணாமல் போனோர் பணிமனை நீதிமன்றில் தெரிவித்தது.

**2023 செப்ரெம்பர் 06**

முதலாம் கட்டமாக அகழ்வு ஆரம்பமானது. முல்லைத்தீவு நீதிமன்றின் கண்காணிப்பில் இந்த அகழ்வுப் பணி தொடங்கியது. 11 தினங்கள் தொடர்ந்த அகழ்வில் 17 எலும்புக்கூடுகள் எடுக்கப்பட்டன.

**2023 நவம்பர் 20**

இரண்டாம் கட்ட அகழ்வு ஆரம்பமானது. தொடர்ந்து 9 தினங்கள் - நவம்பர் 28 வரை தொடர்ந்த அகழ்வில் மொத்தமாக 39 எலும்புக்கூடுகள் மீட்கப்பட்டன என்று அறிவிக்கப்பட்டது.

ஸ்கான் பரிசோதனையில் தற்போது தோண்டப்படும் இடத்திலிருந்து இரண்டு மீற்றர் நீளத்துக்கு எலும்புக்கூடுகள் உள்ளன என்று அவதானிக்கப்பட்டது. (ஐ)

# கசிப்புடன் கைதான பெண்ணுக்கு ரூ. 25,000 தண்டம்

யாழ்ப்பாணம், பெப். 23

யாழ்ப்பாணத்தில் கசிப்புடன் கைதான பெண்ணுக்கு 25 ஆயிரம் ரூபாய் தண்டப் பணம் விதிக்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் - ஆனைக்கோட்டை பகுதியில் 1500 மில்லி லீற்றர் கசிப்புடன் பெண்ணொருவர் மானிப்பாய் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டார்.

கைதான பெண் விசாரணைகளுக்குப் பின்னர், நேற்று முன்தினம் புதன்கிழமை மல்லாகம் நீதவான் நீதிமன்றில் பொலிஸாரால் ஆஜர்படுத்தப்பட்டார்.

இதன்போது, அந்தப் பெண் குற்றத்தை ஏற்றுக்கொண்டதையடுத்து, கடுமையாக எச்சரித்த நீதவான், அவருக்கு 25 ஆயிரம் ரூபாய் தண்டப்பணம் விதித்தார். (அ)

## கொக்குத்தொடு...

கொக்குதொடுவாய் மனித புதைகுழி அகழ்வுப் பணி தொடர்பான குறித்த வழக்கு நேற்று முல்லைத்தீவு நீதிவான் நீதிமன்றத்தில் நீதிவான் தர்மலிங்கம் பிரதீபன் தலைமையில் விசாரணைக்கு எடுக்கப்பட்டது.

இந்த வழக்கின் நிறைவில் செய்தியாளர்களுக்குக் கருத்து வெளியிட்ட சட்டத்தரணி வி. கே. நிரஞ்சன்,

ஏற்கனவே, அகழ்ந்து எடுக்கப்பட்ட எச்சங்களில் இருந்து பிறிதாக எடுக்கப்பட்ட அனைத்துப் பிற பொருட்கள் தொடர்பான பேராசிரியர் ராஜ் சோமதேவ அறிக்கை இன்று (நேற்று) மன்றுக்கு அனுப்பி வைக்கப்பட்டதன் அடிப்படையில் முல்லைத்தீவு நீதிவான் நீதிமன்ற நீதிவான் த. பிரதீபனால் மன்றில் தெரிவிக்கப்பட்டிருந்தது.

பகுப்பாய்வின் அடிப்படையில், மீட்கப்பட்ட மனித எலும்புக்கூடுகள் 1994ஆம் ஆண்டுக்கு முற்படாததும் 1996ஆம் ஆண்டுக்கு பிற்படாததுமான காலத்துக்கு உரியவையாக இருக்கலாம் என்று பல பக்க அறிக்கைகள் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இது ஓர் இடைக் கால அறிக்கையாக பார்க்கப்படுகிறது.

அத்துடன், மீண்டும் எஞ்சிய எலும்புக்கூட்டுத் தொகுதியை அகழ்ந்தெடுப்பதற்கான நடவடிக்கைகள் மார்ச் 4ஆம் திகதி ஆரம்பிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. இருப்பினும், அதற்கான நிதி வழங்கப்படும் பட்சத்தில் அகழ்வு நடைபெறும் என எதிர்பார்க்கப்படுகிறது. ஆகவே, மீண்டும் மார்ச் 4ஆம் திகதிக்கு இந்த வழக்கானது ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

இதேநேரம், மனித எச்சங்களின் வயது, பால், இறப்புக்கான காரணம் போன்ற மருத்துவர்களின் அறிக்கை இன்னும் வராமல் நிலுவையில் இருக்கிறது - என்றார். (ஐ)

ஈழநாடு
Eelanadu

# தெரிவுக் குழுக்களுக்கு உறுப்பினர்கள் நியமனம்

கொழும்பு, பெப். 23

24 பாராளுமன்ற தெரிவுக்குழுக்களுக்கான உறுப்பினர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

பாராளுமன்றத்தினால் 2024 பெப்ரவரி 09 ஆம் திகதி நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தின் பிரகாரம், ஒன்பதாவது பாராளுமன்றத்தின் ஐந்தாவது கூட்டத் தொடரில் குழுக்களில் பணியாற்றுவதற்காக நியமிக்கப்பட்ட உறுப்பினர்களின் பெயர்களை பிரதி சபாநாயகர் அஜித் ராஜபக்ஸ நேற்று சபையில் சமர்ப்பித்தார்.

இதற்கமைய, ஒழுக்கவியல் மற்றும் சிறப்புரிமைகள் பற்றிய குழுவின் உறுப்பினர்களாக பவித்ராதேவி வன்னியாரச்சி, விஜேதாச ராஜபக்ஸ, விஜித பேருகொட, தாரக்க பாலசூரிய, அநுராத ஜயரத்ன உள்ளிட்டோரும் அரசாங்க கணக்குகள் பற்றிய குழுவின் உறுப்பினர்களாக மொஹான் பிரியதர்ஷன டி சில்வா, லசந்த அழகியவண்ண, பிரசன்ன ரணவீர, கே. காதர் மஸ்தான், டயனா கமகே, சாமர சம்பத் தசநாயக்க, வஜிர அபேவர்தன, ஏ.எல்.எம். அதாவுல்லா உள்ளிட்டோரும் அரசாங்க பொறுப்பு முயற்சிகள் பற்றிய குழுவின் உறுப்பினர்களாக ஜகத் புஷ்பகுமார, ஜானக வக்கும்புர,லொஹான் ரத்வத்தே, இந்திக அனுருத்த ஹேரத், சதாசிவம் வியாழேந்திரன், அருணாச்சலம் அரவிந்த குமார், மருதபாண்டி ரமேஷ்வரன் உள்ளிட்டோரும் நியமிக்கப்பட்டுள்ளனர். (அ)

# தமிழக மீனவர்கள் 18 பேர் நிபந்தனையுடன் விடுதலை

## ஒருவருக்கு 6 மாத சிறைத்தண்டனை

யாழ்ப்பாணம், பெப். 23

**எல்லை தாண்டி மீன் பிடியில் ஈடுபட்டமைக்காக இம்மாதம் 8 ஆம் திகதி கைது செய்யப்பட்ட 18 தமிழக மீனவர்கள் விடுதலை செய்யப்பட்டுள்ளனர். அத்துடன், மீனவர்கள் பயணித்த படகொன்று அரசுடைமையாக்கப்பட்டுள்ளதுடன், படகோட்டி ஒருவருக்கு 6 மாத சிறைத்தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.**

நெடுந்தீவு கடற்பரப்பில் இரண்டு படகுகளில் எல்லை தாண்டி மீன் பிடித்துக் கொண்டிருந்த போது 19 தமிழக மீனவர்களும் கடற்படையினரால் கைது செய்யப்பட்டிருந்தனர்.

கடற்படையினரால் ஒப்படைக்கப்பட்ட தமிழக மீனவர்களை யாழ். மாவட்ட கடற்றொழில் நீரியல் வளத்துறை திணைக்கள அதிகாரிகள் ஊர்காவற்துறை நீதிமன்றத்தில் ஆஜர்ப்படுத்தினர்.

இந்த வழக்கு நேற்று ஊற்காவற்துறை நீதிவான் ஜெ. கஜநிதிபாலன் முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட போது, தமிழக மீனவர்கள் 19 பேருக்கு எதிராக குற்றப்பத்திரம் தாக்கல் செய்யப்பட்டது.

ஒரு படகின் உரிமையாளர் குற்றம் இடம்பெற்ற போது படகில் இருந்தமையால், அந்த படகை அரசுடைமையாக்கி நீதிவான் உத்தரவிட்டார்.

மற்றைய படகின் படகோட்டி ஜி.பி.எஸ் கருவியை பாவித்தும் எல்லை தாண்டியமையால், அவருக்கு 6 மாதங்கள் சிறைத் தண்டணை விதித்து நீதிவான் உத்தரவு பிறப்பித்தார்.

ஏனைய 18 மீனவர்களும் 5 வருடங்களுக்கு ஒத்திவைக்கப்பட்ட 18 மாத சிறைத்தண்டளை என்ற அடிப்படையில் விடுதலை செய்யப்பட்டனர். (அ)

# இலங்கை வந்துள்ள இந்தியாவின் ஆன்மீக குழு

கொழும்பு, பெப். 23

இந்தியாவின் கேரள மாநிலம், திருவனந்தபுரத்தில் அமைந்துள்ள சர்வதேச கிருஷ்ண பக்தி கழகத்தின் கிருஷ்ணர் ஆலய தலைமை குரு சுவாமி ஜகத் சாக்ஷி தாஸ் தலைமையிலான குழுவினர் ஆன்மீக சுற்றுலா மேற்கொண்டு நேற்று இலங்கைக்கு வருகை தந்தனர்.

இவர்கள் நேற்று முற்பகல் 11.15 மணியளவில் கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்தனர்.

சுவாமி ஜகத் சாக்ஷி தாஸ் தலைமையிலான 100 பேர் அடங்கிய ஆன்மீகக் குழு இராமாயண வரலாற்றுடன் தொடர்புடைய ஆலயங்களுக்கு சென்று வழிபாடுகளை மேற்கொள்ளவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, உலக அமைதி மாநாட்டை முன்னிட்டு இந்தியாவில் இருந்து வருகை தந்துள்ள சுவாமி கைலாசானந்த் கிரி ஜி உள்ளிட்ட குழுவினர் வரலாற்று சிறப்புமிக்க நுவரெலியா சீதாஎலிய சீதையம்மன் ஆலயத்திலும் ரம்பொடை பக்த அனுமான் ஆலயத்திலும் வழிபாடுகளை மேற்கொண்டனர். (அ)

# நிஷாந்தவின் மரணத்தில் சந்தேகம் எழுந்துள்ளது!

## ஜோன்ஸ்டன் பெர்னான்டோ

கொழும்பு, பெப். 23

இராஜாங்க அமைச்சர் சனத் நிஷாந்தவின் மரணத்தில் சந்தேகம் காணப்படுவதாகவும், இதுதொடர்பாக உரிய விசாரணைகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்றும் ஆளும் தரப்பு பாராளுமன்ற உறுப்பினர் ஜோன்ஸ்டன் பெர்னான்டோ வலியுறுத்தியுள்ளார்.

வாகன விபத்தில் உயிரிழந்த இராஜாங்க அமைச்சர் சனத் நிஷாந்த மீதான, அனுதாப பிரேரணை மீதான உரை நேற்று பாராளுமன்றில் இடம்பெற்றபோதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

இது குறித்து அவர் தெரிவித்துள்ளதாவது-

முன்னாள் இராஜாங்க அமைச்சர் சனத் நிஷாந்தவின் மரணம் திட்டமிட்ட கொலையா? அல்லது சாதாரண விபத்தினால் இந்த மரணம் இடம்பெற்றதா என்பதை விரைவாக ஆராய்ந்து, குற்றவாளிகள் இருப்பின் அவர்களுக்கு விரைவில் தண்டனை வழங்கப்பட வேண்டும்.

சனத் நிஷாந்தவின் மரணத்தில் சந்தேகம் உள்ளது. அந்த சந்தேகத்தின் காரணமாகவே அவரது மனைவி குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தில் முறைப்பாடு செய்துள்ளார்.

சமூக ஊடகங்களிலும் இது தொடர்பாக விவாதம் இடம்பெற்றது. குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ள முறைப்பாட்டை விரைவாக விசாரணைக்கு உட்படுத்தப்பட வேண்டும். சதி திட்டம் இடம்பெற்றிருந்தால் குற்றவாளிகள் சட்டத்தின் முன் நிறுத்தப்பட்டு தண்டிக்கப்பட வேண்டும்-என்றார். (அ)

# பயங்கரவாத எதிர்ப்பு சட்டமூலத்திற்கு அமைய ஜனாதிபதியின் அதிகாரம் மேலும் அதிகரிக்கும்

## சட்டத்தரணி நுவன் போபகே

கொழும்பு, பெப். 23




பயங்கரவாத எதிர்ப்பு சட்டமூலத்திற்கு அமைய, ஜனாதிபதியின் அதிகாரம் மேலும் அதிகரிக்கும் நிலை உருவாகியுள்ளதாக சட்டத்தரணி நுவன் போபகே தெரிவித்தார்.

இந்த சட்டமூலத்திற்கு அமைய, கட்சிகள் மற்றும் அமைப்புகளை தடை செய்யும் அதிகாரமும் ஜனாதிபதிக்கு கிடைப்பதாக அவர் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ள பயங்கரவாத எதிர்ப்பு சட்டமூலம் தொடர்பில் உயர் நீதிமன்றத்தில் முன்வைக்கப்பட்ட மனுக்கள் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட பின்னர் சட்டமூலத்தின் பல சரத்துகளை பாராளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பெரும்பான்மையுடன் நிறைவேற்ற வேண்டுமெனவும் சில சரத்துகளுக்காக மூன்றில் இரண்டு பெரும்பான்மைக்கு மேலதிகமாக மக்கள் கருத்துக்கணிப்பு அவசியம் எனவும் உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

எவ்வாறாயினும், இந்த சட்டமூலம் நிறைவேற்றப்பட்டால் ஜனாதிபதிக்கு உள்ள அதிகாரம் மேலும் அதிகரிக்கும் நிலை ஏற்படுமென சட்டத்தரணி நுவன் போபகே தெரிவித்தார்.

மக்களின் சுதந்திரத்தை கட்டுப்படுத்தும் அதிகாரத்தை பொலிஸ்மா அதிபருக்கும் சட்டமா அதிபருக்கும் ஜனாதிபதிக்கும் பாதுகாப்பு அமைச்சின் செயலாளருக்கும் வழங்கும் பல சரத்துகள் சட்டமூலத்தில் உள்ளதாக அவர் சுட்டிக்காட்டினார். (அ)

# குழந்தைகளுடன் போதைப்பொருள் விற்பனை செய்த மூன்று பேர் கைது

கொழும்பு, பெப். 23

குழந்தைகளை கையில் ஏந்தியவாறு ஐஸ் போதைப் பொருள் விற்பனையில் ஈடுபட்டதாகக் கூறப்படும் இரு பெண்களையும் அவற்றை கொள்வனவு செய்ய சென்ற மூன்று நபர்களும் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டுள்ளனர்.

மொரட்டுவை , எகொடஉயன பிரதேசத்தைச் சேர்ந்த 35 மற்றும் 24 வயதுடைய இரு பெண்களும் அம்பலாங்கொடை, பலப்பிட்டிய ஆகிய பிரதேசங்களை சேர்ந்த மூன்று நபர்களுமே இவ்வாறு கைது செய்யப்படடனர்.

பொலிஸாருக்கு கிடைத்த தகவலின் பேரில் மேற்கொள்ளப்பட்ட சோதனையில் சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். (அ)

# புதிய மின்சாரக் கட்டணத் திருத்த முன்மொழிவு பொதுபயன்பாட்டு ஆணைக்குழுவிடம் கையளிப்பு

கொழும்பு, பெப். 23

புதிய மின்சார கட்டண திருத்தம் தொடர்பான முன்மொழிவை நேற்று வியாழக்கிழமை பொது பயன்பாட்டு ஆணைக்குழுவிடம் கையளித்ததாக இலங்கை மின்சார சபை தெரிவித்துள்ளது.

மின்கட்டணத்தை இயலுமான அளவு குறைப்பதற்கு பல்வேறு தரப்பினருடன் பேச்சுவார்த்தைகள் முன்னெடுக்கப்பட்டன. பலர் சாதகமான யோசனைகளை முன்வைத்துள்ளார்கள். இதற்கமைய கடந்த ஒக்ரோபர் மாதம் அதிகரிக்கப்பட்ட மின்கட்டணத்தை முழுமையாக இரத்து செய்வதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

மின்சார சபையால் ஈட்டப்படும் இலாபத்தை நுகர்வோருக்கு வழங்கும் நோக்கில் இது தொடர்பான முன்மொழிவுகள் சமர்ப்பிக்கப்படுவதாக அதன் ஊடகப் பேச்சாளர் பொறியியலாளர் நோயல் பிரியந்த புதன்கிழமை தெரிவித்திருந்தார்.

வீட்டு மற்றும் மத தலங்களில் மின்கட்டணம் 18 சதவீதத்தாலும், கைத்தொழில்சாலைகள், ஹோட்டல்களுக்கான மின்கட்டணம் 12 சதவீதத்தாலும், அரச நிறுவனங்கள் மற்றும் திணைக்களங்களுக்கான மின்கட்டணம் 24 சதவீதத்தாலும் குறைக்கப்படும். திருத்தம் செய்யப்பட்ட மின்கட்டண திருத்த யோசனை நேற்று வியாழக்கிழமை பொதுப்பயன்பாடுகள் ஆணைக்குழுவிடம் கையளிக்கப்பட்டது.

கடந்த வருடம் ஒக்ரோபர் மாதம் மேற்கொள்ளப்பட்ட மின் கட்டண திருத்தத்தின் மூலம் அதிகரிக்கப்பட்ட மின்சார கட்டணம், இந்த புதிய கட்டண திருத்தத்தில் முற்றாக நீக்கப்படும் என மின்சார சபை அறிவித்துள்ளதாக மின்சார மற்றும் எரிசக்தி அமைச்சர் கஞ்சன விஜேசேகர புதன்கிழமை பாராளுமன்றத்தில் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 23.02.2024 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

# பெப் 21 – சர்வதேச தாய்மொழி தினம்: பங்களாதேஷ் விடுதலையும் மொழிப் போரும்!

ஐங்கரன் விக்கினேஸ்வரா

அன்றைய கிழக்குப் பாகிஸ்தானாக இருந்த, இன்றைய பங்களாதேஷில், “எங்களுக்கு வங்க மொழியே ஆட்சி மொழி; பாகிஸ்தான் திணிக்கும் உருது மொழியை ஆட்சி மொழியாக ஏற்க முடியாது” என்று அறிவித்தது. 1952-ஆம் ஆண்டில் வங்காளிகள் நடத்திய உருதுமொழி எதிர்ப்புப் போராட்டத்தில் உயிர்நீத்த நான்கு மாணவர்களின் தியாகத்தைப் போற்றும் வகையில், அவர்கள் கொல்லப்பட்ட நாளான பெப்ரவரி 21-ஆம் நாள் உலகத் தாய்மொழி நாளாக அறிவிக்கப்பட்டது. இதன் பின்னரே பெப்ரவரி 21. இன்று உலகத் தாய்மொழி நாள் உலகெங்கிலும் கொண்டாடப்படுகிறது.




**தாய்மொழி உணர்த்தும் பாடம்**

தாய் மொழிக்காக போராடி உயிரிழந்தவர்களை நினைவுகூறி, உலகில் அனைத்து மக்களின் தாய் மொழி உரிமையைப் பாதுகாக்கும் வகையில், பெப்ரவரி 21ம் தேதியை சர்வதேச தாய்மொழி தினமாக (International Mother Language Day) ஐ,நாவின் யுனெஸ்கோ 1999ம் ஆண்டு பிரகடனப் படுத்தியது. இதையடுத்து 2000ம் ஆண்டிலிருந்து, பெப்ரவரி 21ம் தேதி உலக தாய்மொழிகள் தினமாக கொண்டாடப்படுகிறது.

இதற்கான மூல காரணம் சரியாக எழுபது ஆண்டுகளுக்கு முன்னால் இன்றைய வங்கதேசத்தில் எழுந்தது என்பதே வரலாற்றின் சான்றாக பொருந்தி அமைகிறது.




அன்றைய கிழக்கு பாகிஸ்தானில், உருது மட்டுமே தேசிய மொழியாக இருந்தது. ஒரே மதத்தினராக இருந்தாலும், மேற்கு பாகிஸ்தானில் அதிகம் பேசப்படும் உருது மொழியானது, கிழக்கு பாகிஸ்தானில் திணிக்கப்படுவதை, வங்காள மக்கள் ஏற்கவில்லை.

**வங்க மொழி இயக்கம்**

இதையடுத்து கிழக்கு பாகிஸ்தானில் தேசிய மொழியாக வங்க மொழியே வேண்டும் என்று 1952-ம் ஆண்டு பெப்ரவரி 21ம் தேதி ‘வங்க மொழி இயக்கம்” உருவானது. இதையடுத்து வங்க மொழி இயக்கத்தைச் சார்ந்த மாணவர்கள், அரசியல் தலைவர்கள் உள்ளிட்ட பல்வேறு தரப்பினரும் தொடர் போராட்டத்தில் ஈடுபட்டனர். பொலிசாரின் நடவடிக்கையால், மாணவர்கள் 4 பேர் உயிரிழந்தனர். போராட்டம் தீவிரமாக பரவியது. அதன்பின் 1956ம் ஆண்டு, கிழக்கு பாகிஸ்தான் மொழியாக வங்க மொழி அறிவிக்கப்பட்டது.

இதையடுத்து, தலைநகர் டாக்காவில் நடைபெற்ற போராட்டத்தில் உயிரிழந்தவர்களின் நினைவாக ஆண்டுதோறும், பெப்ரவரி 21ம் தேதியை உலக தாய்மொழிகள் தினமாகக் கடைபிடிக்க வேண்டும் என்கிற தீர்மானத்தை வங்கதேச அறிஞர் ரபீக்குல் இஸ்லாம் 1998ம் ஆண்டு யுனெஸ்கோவில் முன்மொழிந்தார். 2000ம் ஆண்டிலிருந்து, பெப்ரவரி 21ம் தேதி உலக தாய்மொழிகள் தினமாக கொண்டாடப்படுகிறது.

**வங்கம் பிறந்த வரலாறு:**

இந்தியா-பாகிஸ்தான் என இரு நாடுகளாக 1947 ஆகஸ்ட் மாதத்தில் பிரிந்தபோது, பாகிஸ்தானின் மொத்த மக்கள் தொகை 6.9 கோடி. இதில் 4.4 கோடிப் பேர் கிழக்குப் பாகிஸ்தானில் வசித்தனர். அவர்களின் தாய்மொழி வங்காளியாக இருந்த அதேநேரத்தில், மேற்கு பாகிஸ்தானில் இருந்த மக்கள் உருது, பஞ்சாபி, பஷ்தூ, சிந்தி ஆகிய மொழிகளைப் பேசுபவர்களாக இருந்தனர்.

கிழக்கிந்திய கம்பெனி, பிரிட்டிஷ் ஆட்சி என காலனிய ஆட்சியின் தலைமைப் பீடமாக வங்காளம் நீண்ட காலம் இருந்துவந்த நிலையில், இயற்கையாகவே கிழக்குப் பாகிஸ்தான் பகுதி பொருளாதார உற்பத்தி மட்டுமின்றி, கல்வி உட்படப் பல்வேறு சமூகத் தளங்களிலும் மேற்கு பாகிஸ்தானை விட வெகுவாக முன்னேறிய நிலையில் இருந்தது.

**டாக்கா மாணவர்களின் கிளர்ச்சி:**

டாக்கா மருத்துவக் கல்லூரி மாணவர்களின் கிளர்ச்சியை ஒடுக்க ராணுவம் நடத்திய தாக்குதலில் ரஃபீக் உதீன் அகமது, அப்துல் ஜப்பார், அப்துல் பரக்கத், அப்துல் சலாம் ஆகிய மருத்துவக் கல்லூரி மாணவர்களோடு, ஒன்பது வயதேயான ரஹியுல்லா என்ற சிறுவன் உட்பட ஐந்து பேர் கொல்லப்பட்டனர். நூற்றுக் கணக்கானோர் காயமுற்றனர்.

இவர்கள் உயிர்நீத்த அதே இடத்தில் பெப்ரவரி 23 அன்று தியாகிகள் நினைவுச் சின்னம் தற்காலிகமாக உருவானது. அன்றிலிருந்து ஒவ்வோர் ஆண்டும் அரசின் கடுமையான ஒடுக்குமுறைக்கு இடையே பெப்ரவரி 21ஐ மொழிப் போர் தியாகிகளின் தினமாக கிழக்கு பாகிஸ்தான் மக்கள் கடைப்பிடித்து வந்தனர்.


மக்களின் கடுமையான எதிர்ப்பினை அடுத்து 1956 பெப்ரவரி 16 அன்று பாகிஸ்தானின் அரசு மொழிகளில் ஒன்றாக வங்க மொழி ஏற்றுக்கொள்ளப்பட்டது. எனினும், மேற்கு பாகிஸ்தானின் ஆதிக்க உணர்வு மங்கிவிடவில்லை. பொருளாதாரரீதியாகவும், சமூகரீதியாகவும் கிழக்கு பாகிஸ்தான் மக்களை ஒடுக்கவும், மதரீதியாக அவர்களைப் பிளவுபடுத்தவுமான அனைத்து முயற்சிகளும் மேற்கொள்ளப்பட்டன.

**மொழிப் போரால் பிறந்த நாடு:**

இவ்வாறு தாய்மொழிக்காகத் தொடங்கிய போராட்டம் படிப்படியாக அரசியல்ரீதியாக வலுப்பெற்று, விடுதலைப் போராக உருமாறியது. இப்போரின் போது கிழக்கு பாகிஸ்தான் மக்களை அடக்கி ஒடுக்க பாகிஸ்தான் ராணுவப் படைகள் கட்டவிழ்த்துவிட்ட வன்முறை வெறியாட்டத்தில் முப்பது லட்சம் பேர் படுகொலை செய்யப்பட்டனர் மூன்று லட்சம் பெண்கள் மிகக் கொடூரமான வகையில் பாலியல் வன்கொடுமைக்கு ஆளாயினர். கிழக்கு பாகிஸ்தானில் காலம்காலமாக இருந்து வந்த கட்டமைப்பு வசதிகள் முற்றிலுமாகத் துடைத்தெறியப்பட்டன.

ஒருவகையில், இதை இன ஒழிப்பு நடவடிக்கை என்றே கூறிவிடலாம். வங்கதேசம் உருவாகி 50 ஆண்டுகள் ஆனபிறகும் கூட இந்த இன ஒழிப்பு நடவடிக்கைக்கு பாகிஸ்தான் இன்றுவரை வருத்தம் தெரிவிக்கவில்லை என்பதோடு, இனப் படுகொலை குற்றவாளிகள் என்று அடையாளம் காணப்பட்ட 195 போர்க் குற்றவாளிகள் மீது எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

**மொழியின் அடிப்படையில் வங்கதேசம் என்ற தனியொரு நாடு உருவாக வழிவகுத்தது. இந்தப் பின்னணியில்தான் தாய்மொழியின் முக்கியத்துவத்தை உணர்த்தும் வகையில் சர்வதேசக் கலாச்சார அமைப்பான யுனெஸ்கோ, வங்கதேசத்தின் மொழிப் போர் தொடங்கிய பெப்ரவரி 21-ஐ உலகத் தாய்மொழி நாளாக ஆண்டுதோறும் கொண்டாடப்படுகிறது.**





இறுதியில், உலகிலேயே முதன்முறையாக ஒரு மொழியின் அடிப்படையில் வங்கதேசம் என்ற தனியொரு நாடு உருவாக வழிவகுத்தது. இந்தப் பின்னணியில்தான் தாய்மொழியின் முக்கியத்துவத்தை உணர்த்தும் வகையில் சர்வதேசக் கலாச்சார அமைப்பான யுனெஸ்கோ, வங்கதேசத்தின் மொழிப் போர் தொடங்கிய பெப்ரவரி 21-ஐ உலகத் தாய்மொழி நாளாக ஆண்டுதோறும் கொண்டாட வேண்டும் என 1999 நவம்பர் 17-ல் தீர்மானம் நிறைவேற்றியது. பின்பு, ஐக்கிய நாடுகள் சபையும் தனது உறுப்புநாடுகள் இதைக் கொண்டாட வேண்டுமென பொது அவையில் தீர்மானம் நிறைவேற்றியது.

# இலங்கையில் அதானி நிறுவன திட்டத்தை முறைகேடாக அனுமதிக்க முயற்சியா?

ஷெர்லி உபுல் குமார்

இலங்கையில் மன்னார் பகுதியில் அதானி நிறுவனத்தின் திட்டத்திற்கு முறைகேடாக அனுமதி தர இலங்கை அரசு அமைப்புகள் முயற்சித்து வருவதாக குற்றச்சாட்டு எழுந்துள்ளது. திட்டத்தின் சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீடு உள்ளிட்ட ஆய்வுகள் அனைத்தும் அதானி நிறுவனத்திற்கு சாதகமாக நடத்தப்பட்டு அறிக்கை கொடுக்கப்பட்டிருப்பதாக புகார்கள் கூறப்படுகின்றன. இலங்கையில் அதானி நிறுவனத்தின் திட்டம் என்ன? ராமர் பாலம் உள்பட பாரம்பரிய வரலாற்றுச் சின்னங்கள் அமைந்துள்ள அந்த இடத்தில் இந்த திட்டத்தை நிறைவேற்றுவதால் என்னென்ன பாதிப்புகள் வரக்கூடும்?




சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு அறிக்கை: பறவைகளுக்கான தாழ்வாரங்கள் மஞ்சள் நிறத்தில் காட்டப்பட்டுள்ளன.

இந்த திட்டத்திற்கு அதற்கு சுற்றுச்சூழல் ஆர்வலர்கள், மக்களில் ஒரு பிரிவினர் எதிர்ப்பு தெரிவிப்பது ஏன்?

### மன்னார் பகுதியின் அமைவிட சிறப்புகள்

உலகிலேயே பறவைகள் இடம்பெயர்ந்து செல்லும் முக்கிய எட்டு இடங்களில், தெற்கு ஆசிய மார்க்கத்தின் சொர்க்கமாக இலங்கை விளங்குகின்றது. பல ஆயிரக்கணக்கான கிலோமீட்டர் தூரம் கடந்து, சுமார் 30 நாடுகளில் இடம்பெயர்ந்து இந்த பறவைகள் இலங்கைக்கு வருகின்றன. ஆண்டுக்கு சுமார் ஒன்றரை கோடி பறவைகள் இலங்கைக்குள் பிரவேசிப்பதாக கணக்கிடப்பட்டுள்ளது. இலங்கைக்குள் பறவைகள் பிரவேசிக்கும் பிரதான மார்க்கமாக மன்னார் உள்ளது.


இலங்கையில் தமிழர்கள் அதிகம் வசிக்கும் வட மாகாணத்தின் ஒரு அங்கமாக மன்னார் மாவட்டம் காணப்படுகின்றது. இந்த மாவட்டத்தில் கடல் தொழிலாளர்கள் அதிகளவில் காணப்படுகின்றனர். அதற்கேற்ற விசேஷமான ஒரு சூழல் கட்டமைப்பை இந்த மாவட்டம் கொண்டுள்ளது. இலங்கை வரலாற்றில் இணைந்ததான பூகோள ரீதியிலும் அரசியல் ரீதியிலும் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த இடமாக இந்த இடம் காணப்படுகின்றது. அதனால், மன்னார் மாவட்டத்தில் நிர்மாணிக்க உத்தேசிக்கப்பட்டுள்ள காற்றாலை மின் உற்பத்தி திட்டத்தின் ஊடாக எழுகின்ற பிரச்னை, பறவைகளுக்கு மாத்திரம் மட்டுப்படுத்தப்பட்டதாக அமையாது.

ஆனால், அந்த மதிப்பீடுகளை பொருட்படுத்தாமல், புலம்பெயர் பறவைகள் இலங்கைக்குள் வராத காலப் பகுதியில், அரச நிறுவனங்கள் அறிவியல்பூர்வமற்ற சுற்றுச்சூழல் மதிப்பீட்டு அறிக்கையை தயாரித்து, அதானி கிரீன் எனர்ஜி சிறிலங்கா நிறுவனத்திற்கு, உத்தேச மன்னார் கற்றாலை மின்உற்பத்தி திட்டத்தை வழங்குவதற்கு தயாராகி வருவதாக பல்வேறு தரப்பினரும் குற்றச்சாட்டுகளை முன்வைத்து வருகின்றனர்.

### "மன்னாரில் 10 லட்சம் பறவைகள் தங்குகின்றன"

காற்றாலை மின் உற்பத்தி திட்டத்திற்கான அனுமதியை வழங்கும் வகையில் தயாரிக்கப்பட்டுள்ள சுற்றுச்சூழல் மதிப்பீட்டு அறிக்கை, மத்திய சுற்றாடல் அதிகார சபையினால் வெளிப்படுத்தப்பட்டுள்ளது. இந்த அறிக்கைக்காக மக்கள் கருத்துக் கேட்பு மார்ச் மாதம் 6-ம் தேதி வரை இடம்பெறுகின்றது. எனினும், இவ்வாறு எழுகின்ற குற்றச்சாட்டுகளை இலங்கை நிலைபெறுதகு வலு அதிகார சபை மற்றும் சுற்றுச்சூழல் மதிப்பீட்டு அறிக்கையை தயாரித்த நிபுணர் குழு ஆகியன நிராகரித்துள்ளன.

"இலங்கைக்கு வருகைத் தரும் புலம்பெயர் பறவைகளில் 10 லட்சம் வரை பறவைகள் அக்டோபர் மாதம் முதல் மார்ச் மாதம் வரையான காலப் பகுதியில் மன்னாரில் தங்கிவிடும். எனினும், புலம்பெயர் பறவைகள் இல்லாத காலப் பகுதியில் ஆய்வுகளை நடாத்தி, அதில் புலம்பெயர் பறவைகளுக்கு பிரச்னை கிடையாது என இந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. இது பெரும் தொழில்நுட்ப தவறாகும். இரண்டாவது விஷயம் என்னவென்றால், இந்த அறிக்கையை தயாரித்தவர்கள் அதிகாலை 6 மணி முதல் மாலை 6 மணி வரையான






பகல் பொழுதில் நடந்து சென்று தயாரித்துள்ளனர். எனினும், ஆயிரக்கணக்கான புலம்பெயர் பறவைகள் இரவு நேரத்திலேயே பறப்பதாக செய்மதி தொழில்நுட்பத்தின் ஊடாக விஞ்ஞான ரீதியில் சுட்டிக்காட்டியுள்ளோம்.

இவ்வாறு பறந்து வரும் பறவை கூட்டத்தில், சில வேளைகளில் இரண்டரை முதல் நான்கு லட்சம் வரையான பறவைகள் காணப்படுகின்றன. அப்படியென்றால், பகல் பொழுதில் வனப் பகுதிகளில் தங்கியிருந்து, இரவு வேளைகளில் பறக்கும் பறவைகள் தொடர்பில் எவ்வாறு கூற முடியும்? என கொழும்பு பல்கலைக்கழகத்தின் விலங்கியல் துறை பேராசிரியர் சம்பத் சேனவிரத்ன, தெரிவித்துள்ளார்.

"பறவைகளுக்கு செல்ல பாதையொன்று அமைக்கப்பட்டுள்ளதாக நகைச்சுவையொன்று இதில் கூறப்பட்டுள்ளது. அதனூடாக செல்ல வேண்டும் என்றால், திருப்புமுனைகளில் பெயர் பலகைகள் இருக்க வேண்டும். அதானியின் வரைபடத்தையும், சுற்றாடல் அதிகார சபையின் வரைபடத்தையும் ஒப்பிட்டு பார்க்கும் போது,









அந்த பாதைக்கு இடையிலும் காற்றாலைகள் காணப்படுகின்றன.

அதானியின் பாதையில் செல்வதற்கு பறவைகளுக்கு பயிற்சிகள் வழங்கப்பட வேண்டும். இந்த இடத்தில் எப்படியாவது காற்றாலை திட்டத்தைக் கொண்டு வரும் வகையிலேயே இந்த அறிக்கை தயாரிக்கப்பட்டுள்ளது" என அவர் மேலும் கூறுகின்றார்.



பறவைகளின் சொர்க்கமாக காணப்படுகின்ற மன்னார் தீவும், அதனை அண்மித்துள்ள பகுதிகளும் விஞ்ஞான ரீதியில் மிக முக்கியத்துவம் வாய்ந்த இடமாக கருதப்படுகின்றது. ராமர் பாலம் (ஆதாம் பாலம்) தேசிய பூங்காவாகவும், விடத்தல் தீவு இயற்கை வனப் பகுதியாகவும், வங்காலை புனித பூமியாகவும் சர்வதேச ரீதியில் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த இடங்களாக பிரகடனப்படுத்தப்பட்டுள்ளன.

எனினும், ராமர் பாலத்தை (ஆதாம் பாலம்) தேசிய பூங்கா பட்டியலிலிருந்து நீக்குவதற்கும், விடத்தல் தீவை இயற்கை வனப் பகுதியிலிருந்து விடுவிப்பதற்கும் வன விலங்குகள் பாதுகாப்பு திணைக்களத்திடம் கோரிக்கை முன்வைக்கப்பட்டுள்ள பின்னணியிலேயே, இந்த காற்றாலை திட்டம் பேசுபொருளாக மாறியுள்ளது.

### அதானியின் இந்த திட்டம் என்ன?

உத்தேச மன்னார் காற்றாலை மின் உற்பத்தி திட்டத்தின் இரண்டாம் கட்டத்தின் கீழ் 250 மெகாவாட் மின் சாரத்தை உற்பத்தி செய்வதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. அத்துடன், புதிதாக 52 காற்று விசையாழிகள் ஸ்தாபிக்கப்பட்டுள்ளன. தம்பவாணி காற்றாலை திட்டத்திற்கு இணையாக மன்னார் தீவில் பெரும்பாலான பகுதிகளில் புதிய காற்றாலை விசையாழிகளை பொருத்த திட்டமிடப்பட்டுள்ளதாக சுற்றுச்சூழல் அறிக்கையினூடாக அறிய முடிகின்றது.

ஆண்டொன்றில் 1048 மணித்தியாலங்களுக்கான ஜிகாவாட் மின்சாரத்தை உற்பத்தி செய்ய திட்டமிடப்பட்டுள்ளது. இதனூடாக ஆண்டொன்றில் 8 லட்சம் டன் கரியமில வாயு உமிழ்வை குறைக்கும் என கூறப்படுகின்றது. இதற்காக ஆண்டொன்றிற்கு 1.8 கோடி ரூபாய் எரிபொருளுக்காக செலவிடப்படவுள்ளதாக கணிக்கப்பட்டுள்ளது.

இலங்கை நிலைபெறுதகு வலு அதிகார சபையினால் 2014-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 17-ம் தேதி வெளியிடப்பட்ட 1852-2 என இலக்கமிடப்பட்ட அதிவிசேட வர்த்தமானி அறிக்கையின் பிரகாரம், மின்உற்பத்தி அபிவிருத்தி பிரதேசத்திற்குள் 202 ஹெக்டேர் நிலப்பரப்பில் இந்த திட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது.

### அதானி நிறுவன திட்டத்தை முறைகேடாக அனுமதிக்க முயற்சியா?

"இலங்கை நிலைபெறுதகு வலு அதிகார சபை இந்த திட்டத்தின் திட்ட முன்மொழிவாளராக செயற்பட்டு வருகின்றது. இது சட்டவிரோதமானது" என கலாநிதி ஜகத் குணவர்தன தெரிவித்துள்ளார்.

"இதில் மூன்று விதமான தவறுகள் காணப்படுகின்றன. சுற்றுச்சூழல் தாக்கத்தின் மதிப்பீட்டு அறிக்கையை சுற்றாடல் அதிகார சபை தயார் செய்து, அதற்கேற்ற சரியான இடத்தை தெரிவு செய்ய வேண்டும். ஆனால் மாற்று இடத்தை தேர்வு செய்வதனை தவிர்த்து, சுற்றாடல் அதிகார சபை முதலில் தெரிவு செய்ய மன்னாரையே பொய்யான முறையில் பெயரிடுகின்றது.

சுற்றாடல் சட்டத்தின் பிரகாரம், மாற்று இடம் இது வரை அடையாளம் காணப்படவில்லை. இரண்டாவது, அதானி நிறுவனத்திற்காக இந்த திட்டத்தை அரசாங்கத்தின் ஒழுங்குபடுத்தல் நிறுவனமான இலங்கை நிலைபெறுதகு வலு அதிகார சபையே நிர்வகித்து வருகின்றது. எப்படி அது நடக்க முடியும்.

(15ம் பக்கத் தொடர்ச்சி)

# இலங்கையில் அதானி நிறுவன திட்டத்தை...

(16ம் பக்கத் தொடர்ச்சி)

மூன்றாவது, இந்த இடத்தை முன்மொழிந்தவராக எடுத்துக்கொண்டு, மூன்றாவது நபருக்கு வழங்கினால், அதற்கான முறை என்ன? அப்படியொன்றால், விலைமனு கோரப்பட்டு, தகுதியானவர் தெரிவு செய்யப்பட வேண்டும். ஆனால், அதானி முன்னராகவே தெரிவு செய்யப்பட்டு, அதனை அவருக்கு வழங்க முயற்சிப்பார்களாயினும், அது பாரிய முறைகேடாகும்" என கலாநிதி ஜகத் குணவர்தன தெரிவிக்கின்றார்.

**"சட்டத்தை எப்படி விளக்குவது என தெரியவில்லை"**

ஒழுங்குப்படுத்தல் நிறுவனமாக செயற்படுகின்ற அரச நிறுவனமொன்று, திட்டத்தின் முன்மொழிவாளராக செயற்படுகின்றமையின் சட்ட பின்னணி என்னவென்றது தொடர்பில் நாம், இலங்கை நிலைபெறுதகுவலு அதிகார சபையின் தலைவர் பொறியியலாளர் ரஞ்ஜித் சேபாலவிடம் வினவினோம்.

எனினும், அவர் சட்டத்தின் பின்னணி குறித்து தெளிவூட்டுவதற்கு பதிலாக, முதலீட்டாளருக்கு வசதிகளை ஏற்படுத்திக் கொடுப்பதன் முக்கியத்தும் தொடர்பில் கருத்து வெளியிட்டார்.

'சட்டத்தை எப்படி விளக்குவது என்பது தொடர்பில் எனக்கு தெரியாது. நாங்கள் திட்ட முன்மொழிவாளர்கள் என விண்ணப்பமொன்றை முன்வைத்தோம். இந்த திட்டம் எங்களுடைய அதிகாரத்தினால் செயற்படுத்தப்படுகின்றது என இதனூடாக குறிப்பிடப்படவில்லை. இந்த திட்டத்தை முன்னெடுப்பதற்கு தேவையான அனைத்து அங்கீகாரங்களையும் பெற்றுக்கொடுப்பதையே நாம் செய்கின்றோம்.

முதலீட்டாளர்கள் வந்து இதனை செய்வதற்கு இரண்டு மூன்று வருடங்கள் சென்றுவிடும். அப்படியென்றால், முதலீட்டாளர்கள் வருகை தர மாட்டார்கள். முதலீடு செய்ய தயார் என்ற அடிப்படையிலேயே நாம் இதனை செய்கின்றோம். அதில் எமக்கு ஏதேனும் செலவீனங்கள் ஏற்படும் பட்சத்தில் அதனை நாம் அறவிட்டுக் கொள்வோம். இதுவே எமது கொள்கையாகும்" என அவர் பதிலளித்தார்.

**"காற்றாலைகளில் பறவைகள் மோதுகின்றன"**

இந்த திட்டத்திற்கான சுற்றாடல் பாதிப்புகள் தொடர்பில் அறிக்கையை ரமணி எல்லேபொல தலைமையிலான புத்திஜீவிகள் குழு தயாரித்துள்ளது. பறவைகள் மற்றும் மிருகங்களுக்கு ஏற்படுகின்ற பாதிப்புகள் குறித்து கொழும்பு பல்கலைக் கழகத்தின் பேராசிரியர் தேவக்க வீரகோன், மூலிகைகளுக்கு ஏற்படுகின்ற பாதிப்புகள் தொடர்பாக கலாநிதி ஹிமேஷ் ஜயசிங்க, நீர்நிலைகளுக்கு ஏற்படுகின்ற பாதிப்புகள் குறித்து டி.ஏ.ஜே.ரணவல ஆகியோர் ஆராய்ந்துள்ளனர். இந்த நடவடிக்கைகளுக்காக குழுவொன்று ஒத்துழைப்புக்களை வழங்கியுள்ளது.

இந்த ஆய்வு குழுவின் பிரதானியாக செயற்பட்ட ரமணி எல்லேபொல, இவ்வாறு கருத்து தெரிவித்தார்.

"அதானிக்கு தேவையான திட்டத்திற்கு நாம் அனுமதி வழங்கியதாக கூற முடியாது. சுற்றுச்சூழல் நிலைமைகளை ஆராய்ந்து சில காற்றாலை விசையாழிகளை அகற்றியுள்ளோம். சில விசையாழிகள் நிர்மாணிக்கப்பட்ட இடங்களை மாற்றியுள்ளோம்."

இதேவேளை, 2017-ம் ஆண்டு செப்டம்பர் மாதம் முதல் 2018-ம் ஆண்டு செப்டம்பர் மாதம் வரை புலம்பெயர் பறவைகள் தொடர்பாக ஆய்வுகளை நடாத்தினோம். எனினும், இரவு வேளைகளில் பறவைகள் தொடர்பாக ஆராயவில்லை என, கலாநிதி தேவக்க வீரக்கோன் தெரிவித்துள்ளார்.

"இரவு நேரத்தில் இருள் சூழ்ந்துள்ளமையினால், பறவைகள் வருவது குறைவாக இருக்கும். நாங்கள் பெரியளவிலான தாக்கத்தை இதற்கு செலுத்தவில்லை. நாம் சேகரித்த தரவுகளின் அடிப்படையிலும், மாதிரி அறிக்கையின் அடிப்படையிலும் இந்த அறிக்கை தயாரிக்கப்பட்டுள்ளது. காற்றாலை விசையாழிகளில் பறவைகள் மோதுகின்றன. அதனை பூஜ்ஜியத்திற்கு கொண்டு வர முடியாது. பறவைகள் மோதுவதை குறைக்கும் வகையிலேயே நாம் முயற்சிகளை மேற்கொண்டுள்ளோம்" என கலாநிதி தேவக்க வீரகோன் தெரிவிக்கின்றார்.

**அதானி நிறுவன திட்டத்தால் மன்னார் பகுதிக்கு என்ன ஆபத்து?**

தம்பவாணி என்ற பெயரில் இலங்கை மின்சார சபைக்கு சொந்தமான காற்றாலை மின்உற்பத்தி நிலையம் மன்னாரில் தற்போது முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. இந்த திட்டத்தை நிர்மாணிக்கும் போது, சுற்றாடல் பாதிப்புகள் தொடர்பில் ஆய்வு அறிக்கை தயாரிக்கப்பட்டுள்ளது.

எனினும், இந்த மின் உற்பத்தி நிலையத்தினால் ஏற்படுகின்ற பறவைகளின் மரணங்களின் எண்ணிக்கை, ஆய்வுகளின் ஊடாக மதிப்பிடப்பட்டதை விடவும் அதிகமாக காணப்படுகின்றது. இந்த மின் உற்பத்தி நிலையத்தின் விசையாழிகள், கரையோர பகுதியொன்றை அண்மித்தே நிர்மாணிக்கப்பட்டுள்ளது. எனினும், அதானி நிறுவனத்தின் திட்டத்தினால் மன்னார் தீவு பகுதியில் பெரும் பகுதியை ஆக்கிரமித்து விசையாழிகள் இயங்கவுள்ளன. அதனால், அதிக சேதம் ஏற்பட வாய்ப்புள்ளது" என சுற்றாடல் ஆர்வலர்கள் குறிப்பிடுகின்றனர்.

உத்தேச காற்றாலை திட்டத்தின் ஒரு விசையாழியை ஸ்தாபிப்பதற்காக 27 மீட்டர் விட்டத்தை கொண்ட நிலப்பரப்பு தேவைப்படுகின்றது. அத்துடன், ஒவ்வொரு காற்றாலை விசையாழியை சூழவும் 17 மீட்டர் நீளமான பிரவேச மார்க்கம் தயாரிக்கப்பட்டுள்ளது. அவ்வாறு வீதிகள் நிர்மாணிக்கப்படுவதால், இயற்கை நீர்நிலைகளுக்கு பாதிப்பு ஏற்பட்டு, மன்னார் பகுதியில் வெள்ளப்பெருக்கு அதிகரிக்கும் நிலைமை ஏற்படக் கூடும் என, சுற்றாடல் நீதிக்காக நிலையத்தின் மூத்த ஆலோசகர் ஹேமந்த விதானகே தெரிவிக்கின்றார்.

"நாங்கள் முன்னர் காற்றாலை மின் உற்பத்தி நிலையத்தை ஸ்தாபிக்கும் போது, மன்னாரில் வெள்ளப்பெருக்கு ஏற்படும் என அறிந்திருக்கவில்லை. எனினும், வீதிகள் அமைக்கப்பட்டதன் பின்னர் வெள்ளம் ஏற்பட்டது. வெள்ளப்பெருக்கு ஏற்படக்கூடிய 7 அல்லது 8 இடங்களை மத்திய சுற்றாடல் அதிகார சபை அடையாளம் கண்டுள்ளது. மன்னாரின் பல பகுதிகளில் வறட்சியான இடங்கள் காணப்படுகின்றன.

நீர் இருக்கும் இடத்திலிருந்தே மக்கள் குடிநீரை பெற்றுக்கொள்கின்றார்கள். எமக்கு தேவையான விதத்தில் சூழலை மாற்றியமைக்க முயற்சித்தால், மன்னாரில் வாழ்கின்ற சுமார் 70,000 பேருக்கு நீர் இல்லாது போகும். அதற்கு மேலதிகமாக காற்று காணப்படுகின்ற இடங்களில் நிழல் காணப்படுவதை உணர முடியும்" என அவர் கூறுகின்றார்.

சுற்றாடல் பாதிப்புகளை மதிப்பீடு செய்த அறிக்கையின் ஊடாக அடையாளம் கண்டுள்ள பிரச்னைகளை குறைத்துக்கொள்வதற்கு, அவர்கள் தயாரித்த அறிக்கையிலேயே பரிந்துரைகள் முன்வைக்கப்பட்டுள்ளன. மத்திய சுற்றாடல் அதிகார சபையின் இணையதளத்திற்கு பிரவேசிப்பதன் ஊடாக ஆங்கிலம், தமிழ் மற்றும் சிங்கள மொழிகளில் அவற்றை பதிவிறக்க முடியும்.

இதுதொடர்பான கருத்துகளை முன்வைக்க வேண்டும் என்றால், மார்ச் மாதம் 06ம் தேதிக்கு முன்னர் dg@cea.lk என்ற மின்னஞ்சல் முகவரி ஊடாக கருத்து களை பகிர்ந்து கொள்ள முடியும்.

